51

# குமரி மலர்

பதிப்பாசிரியர்

ஏ. கே. செட்டியார்

50 காசு




23 வயதான சங்கம், சுதந்திரமடைந்து 11 வது ஆண்டில் புகும் நாட்டைப் பெருமையோடு வாழ்த்துகிறது; திட்டப்படி கைத்தறி ஒன்றுக்கு நூறு பேருக்கு நபர் ஒன்றுக்குப் பதினெட்டரைக் கஜம் துணி விகிதம் தயாரிக்க உறுதி கூறுகிறது.

# கோ-ஆப்டெக்ஸ்

கைத்தறி ஆடைகள்

சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர்
கூட்டுறவுச் சங்கம் லிமிடெட்

பாலசுந்தரம் மாளிகை

34A-1 பாந்தியன் சாலை – மதராஸ் - 8


சுவர்ண மாளிகை
P.A. ராஜு செட்டியார் & பிரதர்
கோயமுத்தூர்
P-1-49

# ANNOUNCEMENT.



"TEXTOOL"

**TAKES PRIDE TO ANNOUNCE THAT THEIR 4 CYLINDER 36 To 86 H. P. AUTOMOTIVE DIESEL ENGINES**

will be out in the market Soon!!

Await Further News !!!

MANUFACTURERS:-

**Textool Company Limited,**

**Post Box No. 221,**

COIMBATORE.

**Phone:** 409 1409

**Gram:** 'TEXTOLCO'

# பாங்க் ஆப் மதுரை லிமிடெட்,

**தோற்றம் : 1943.**

## மதுரை

கிளைகள் :—கோயமுத்தூர், சேலம், புதுக்கோட்டை, ராயவரம், கீரனூர், கண்டனூர், அறந்தாங்கி, பொன்னமராவதி, தேவகோட்டை, திருப்பத்தூர் (வடஆற்காடு மாவட்டம்).
தர்மபுரி, ஆத்தூர், எடப்பாடி, (சேலம் மாவட்டம்)

மற்றும் எல்லா முக்கிய வியாபார தலங்களிலும்
ஏஜென்சிகள் உண்டு.

இயக்குநர் :

ஸ்ரீ கருமுத்து தியாகராசன், தலைவர்
ஸ்ரீ வ. ராம. வெள்ளியப்ப செட்டியார்
ஸ்ரீ நா. அ. அண்ணாமலை செட்டியார்
ஸ்ரீ உ. ராம. மெ. சுப. சேவு. அ. அண்ணாமலை செட்டியார்

கவர்ச்சிகரமான விகிதத்தில் பலவித டிபாசிட்டுகள் ஏற்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| **சேவிங்ஸ் டிபாசிட்டுகள்** | — | 3% |
| **கரண்ட் டிபாசிட்டுகள்** | — | ½% |

ரூ. 5/- முதல் சேவிங்ஸ் கணக்கில் ஏற்றுக்கொள்கிறோம்.

பிக்சட் டிபாசிட்டுகள் 3, 6, 12, 24 மாதங்களுக்கு ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

வட்டி விகிதங்கள் விண்ணப்பத்தின் பேரில்.

எல்லா விதமான வங்கி அலுவல்களும் கவனிக்கப்படும்.

சுறு சுறுப்பும், மரியாதையும் நிறைந்த சேவை.

**P. S.** விஸ்வநாதன்,
காரியதரிசி.

# சைபால்

வெட்டுக்காயம், சொரிசிறங்கு,

வேனல்கட்டி. தீப்பட்டபுண்

கரப்பான், முகப்பரு, சேத்துப்புண்,

முதலிய வியாதிகளைப்

போக்குவதில் கைகண்ட களிம்பு

---

ரமணீஸ்

# பேபிகிரைப்

குழந்தைகளின் ஆரோக்கியத்திற்கு
சிறந்தது.

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

---

தயாரிப்பவர்கள் :

தி சௌத் இந்தியன் மான்யுபாக்சரிங் கம்பெனி

மதுரை

# குமரி மலர் வெளியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | மலேயா முதல் கானடா வரை | ரூ. | 2 – 50 |
| 2 | அமெரிக்க நாட்டில் | ” | 5 – 00 |
| 3. | கரிபியன் கடலும் கயானாவும் | ” | 4 – 00 |
| 4. | உலகம் சுற்றும் தமிழன் | ” | 2 – 00 |
| 5. | பிரயாணக் கட்டுரைகள் | ” | 1 – 50 |
| 6. | அண்டை நாடுகள் | ” | 0 – 90 |

வெளிவந்துவிட்டன.

●

**ஐரோப்பா வழியாக**

**விரைவில் வெளிவரும்.**

மலர் 15 குமரிமலர் இதழ் 4

விளம்பி - ஆவணி

# உள்ளுறை

| | | பக்கம் |
|---|---|---|
| 1. மகாதேவ தேசாய் | —ஸ்ரீமதி சரோஜினி தேவி | 1 |
| 2. எல்லாம் நீயே | —ஸ்வாமி ராமதீர்த்தர் | 5 |
| 3. கேள்வியும் பதிலும் | காந்தியடிகள் | 11 |
| 4. பொட்டாசியம் குளோரேட்டு | P. B. ஸ்ரீரங்கன் | 17 |
| 5. ஒரு சீனக் கதை | —எல். ஸி ரிச்சர்டு | 27 |
| 6. மணிமுத்தாறு | | 35 |
| 7. கொய்த மலர்கள் | | 40 |
| 8. பழங்காலப் பொம்மைகள் | —மொராக்கோ வில்லியம்ஸ் | 48 |
| 9. முந்திரி | | 51 |
| 10. தென் துருவம் | | 58 |
| 11. உலகில் மிகப் பெரிய நகரம் | | 61 |
| 12. பிரிட்டன் - ஜோர்டான் உறவு | | 66 |
| 13. ஹெலன் கெல்லர் | —டி. டி, மாணிக்கம் | 72 |
| 14. வாழ்க்கைப் பாதையில் | —வளவனூர் தண்டபாணி | 77 |

# மகாதேவ தேசாய்

ஸ்ரீமதி சரோஜனி தேவி

*[ஸ்ரீ மகாதேவ தேசாய் 1942-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில்—இன்றைக்குப் பதினறு ஆண்டுகளுக்கு முன் நம்மை விட்டுப் பிரிந்தார். அவரைப் பற்றிக் கவியரசி சரோஜனி தேவி, பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் எழுதிய கட்டுரை இது.]*

அந்த அன்பு மிகுந்த மேதாவியைப் பற்றி இன்பமான எண்ணங்களும், துன்பமான எண்ணங்களும் என் இதயத்தில் வந்து நிறைகின்றன. அவருடைய நட்பைப் பெறுவது ஒரு பாக்கியம்; தோழமையைப் பெறுவது ஓர் ஆனந்தம்.

இருபத்தைந்து வயதுதான்; பேரும் புகழும் தேடும் பிராயம். ஆனல் மகாத்மாவின் மந்திர சக்தியில் விழுந்து விட்டார். அவர் தம்முடைய இளமை, இலட்சியங்கள், அபூர்வமான இலக்கிய ஆற்றல், பாண்டியத்தியம், தேச பக்தி ஆகிய சாம்பிராணி கஸ்தூரி போன்ற விலையுயர்ந்த பொருள்களையெல்லாம் கொண்டுவந்து குருவுக்குப் பாத பூஜை செய்ததை அறிவேன். இருபத்தைந்து ஆண்டுகள், இடைவிடாமல் எள்ளளவு குறைபாடுமின்றி குருசேவை செய்தார். அவர் செய்த வேலைகள் கணக்கில் அடங்கா.

என்னுடைய நினைவுத் திரையில் எத்தனையோ விஷயங்கள் தோன்றி மறைகின்றன. இதோ காந்தியடிகள் ஆசிரமத்தின் முக்கியஸ்தராகக் காண்கிருர்.

இவர்தான் எப்பொழுதும் சிரித்தமுகத்துடன் தோன்றும் மகாதேவ். இவரைச் சுற்றி உட்கார்ந்து கொண்டுதான் இவருடைய நுண்ணிய ஹாஸ்யத்தைப் பருகிக்கொண்டு இருக்கிறார்கள். இதோ தோன்றும் மகாதேவ் தம்முடைய எண்ணங்களையும் தமது குருவினுடைய எண்ணங்களை யும் அழகான மொழிகளில் உருவாக்கிக் கொண்டிருக் கிறார். இப்போது மகாதேவ் வெள்ளைச் சால்வை போர்த்திக் கொண்டு வைசிராய் மாளிகை படியில் அரசியல் தூதராக ஏறிக் கொண்டிருக்கிறார். இங்கே அவர் அமெரிக்காவிலிருந்தும் ஐரோப்பாவிலிருந்தும் புண்ணிய க்ஷேத்திர யாத்திரிகர்களாக வந்துள்ள அந்நிய நாட்டினருக்கு அழகாகவும் மரியாதையாகவும் இந்தியாவின் பண்பாட்டையும் குருவின் இதோப தேசத்தையும் தெள்ளத் தெளிய விளக்கிக் கொண்டு இருக்கிறார்.

எல்லா நிறைவுகளிலும் அதிகமாக இதயத்தை உருக்குவது அவருடைய பிரிவும் அதன்பின் நடந்த துக்ககரமான காட்சியுமே யாகும்.

தலைவர்களை 1942 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஒன்பதாம் தேதி கைது செய்து ஆகாகான் அரண் மனைக்குக் கொண்டுபோனது முதல், அவர் ஏதோ அபாயம் வரப்போவது போன்ற அச்சத்தால் பீடிக்கப் பட்டவராகத் தோன்றினார். மகாத்மா மரணம்வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அடிக்கடி கூறிவந்த படியே திடீரென்று நிகழ்ந்து விடுமோ என்று எண்ணினார்; ஆகஸ்டு மாதம் பதினாலாம் தேதி இரவு, அரண்மனை முழுவதும் நிசப்தமாய் இருந்த சமயத்தில் மகாதேவ் என்னுடைய அறையில் உட்கார்த்து ஏதோ சொற்ப நேரமே உள்ளது போலவும், அதற்குள் பேச

வேண்டிய தெல்லாம் பேசி முடித்துவிட வேண்டும் என்று எண்ணியது போலவும் வெகுநேரம் வரை பேசிக் கொண்டிருந்தார். அப்போது அவர் தம்முடைய வாழ்வைப் பற்றி எதையும் மறைத்துக் கொள்ளாமல் சுருக்கமாகச் சொல்லிக்கொண்டிருந்தார். தம்முடைய அருமை மனைவியாரைப் பற்றியும் மகனைப் பற்றியும் சொன்னார். அவர் பேசிய முக்கிய விஷயம் தம்முடைய இஷ்ட தேவதையாகிய மகாத்மாவைப் பற்றித்தான். ஏதோ அந்த இரவு அபாயம்வரப்போவதாக எண்ணியது போல காணப்பட்டார். ஆனால் மறுநாள் காலை அந்தச் சோர்வுக்குறி எதுவும் காணப்படவில்லை. வழக்கம் போல உற்சாகமாகவே காணப்பட்டார். தோட்டத்தில் காந்தி யடிகளுடன் உலாவிவிட்டு வந்ததும், "இன்று ஏன் இவ்வளவு ஆனந்தம் என்று எனக்கு விளங்கவில்லை" என்று என்னிடம் கூறினார். பிறகு சிறிது நேரத்துக் கெல்லாம் என்னுடைய அறைக்கு வந்து, அவருக்காகக் காத்திருந்த டாக்டருடன் வேடிக்கையாகப் பேசினார். சில நிமிஷங்கள் செல்லவில்லை. அதற்குள் புன்னகை புரிந்து கொண்டே, "என்னுடைய தலை சுழல்கின்றதே" என்று கூறினார். அவர் என்ன சொன்னார் என்று நாங்கள் உணர்வதற்கு முன்னதாவே பிரிந்து போய் விட்டார். யார் அழைத்தும் எழுந்திருக்கவு மில்லை; ஏனென்று கேட்கவுமில்லை.

அன்று துக்கசாகரத்தில் ஆழ்ந்து போயிருந்த குரு, தமது அத்தியந்த அன்புடைய சிஷ்யருக்குச் செய்த சரமக் கிரியைகளைப் பற்றி வர்ணிக்க என்னுடைய பேனாவுக்குச் சக்தி கிடையாது,

காந்தியடிகள், பிறர் உதவியின்றி, தாமாகவே அந்தச் சலவைக்கல் போல குளிர்ந்துபோன உடலைக்

குளிப்பாட்டிய பொழுது. அவருடைய கைகள் நடுங்கின. சந்தனம் பூசி, புஷ்பங்களால் அலங்கரித்து வைத்துக் கொண்டு, "மகாதேவ், இதை நீ எனக்குச் செய்வாய் என்று எண்ணினேன்; இபபொழுது நான் அதை உனக்குச் செய்ய வேண்டியவனுய் இருக்கிறேன்" என்று தழுதழுத்த குரலில் கூறினர்,

ஆகஸ்டு மாதம் பதினைந்தாம் தேதி மாலை மஞ்சள் வெயிலில், மகாதேவ தேசாயின் உடலை அரண்மனைத் தோட்டத்தில் உள்ள ஓரு மூலையில் எரிப்பதற்காக மிக்கத் துக்கத்துடன் கொண்டு போனேம். காலையில் ஜீவனுள்ள ஜோதியாய் இருத்தது; மாலையில் நிறுபூத்த நெருப்புக் குவியலாய் விட்டது.

மகாதேவ் மறைந்து விட்டாரா? சிறந்த தியாகத் தோடு சேவை செய்த தம்முடைய குருவின் இதயத் திலும், தேசத்தின் இருதயத்திலும் இப்பொழுதும் ஜீவித்துக் கொண்டிருக்கிருர் அல்லவா?

---

மகாதேவ தேசாயினுடைய தலைசிறந்த பண்பு. சந்தர்ப்பம் ஏற்படும் போதெல்லாம் தம்முடைய சுயநலம் முழுவதையும் அறவே இல்லாமல் செய்து கொள்ளும் சக்தி உடைமையேயாகும். —காந்தியடிகள்.

மகாதேவ் நம்மில் பலருக்கு ஒரு ஸ்தாபனம் போல ஆகிவிட்டார். அவர் சாந்தமானவர்; திறமை வாய்ந்தவர். சதா காலமும் உழைப்பவர்; தன்னலத்தை மறந்தவர்; பரிபூரணமாக அர்ப்பணம் செய்தவர், அவரை அறிய அறிய அவரிடத்தில் அன்பும் மதிப்பும் அதிகரிக்கும்.

எதைச் செய்தாலும் அவர் திறமையாகவும் சரியாக வும் செய்பவர். அவர் பெரிய பண்டிதர்; ஆனாலும் மனிதப் பண்பு உடையவர். —ஜவாஹர்லால் நேரு.

---

# எல்லாம் நீயே

சுவாமி ராமதீர்த்தர்

ஐரோப்பிய, அமெரிக்க வேதாந்த மெல்லாம் மனிதனது விழிப்பு நிலையின் அனுபவத்தையே ஆதார மாகக் கொண்டுள்ளன; கனவு அல்லது ஆழ்ந்த தூக்க நிலையை அவை கவனிக்கவே யில்லை, அல்லது அற்பமே கவனித்திருக்கின்றன.

''பூர்த்தியற்ற ஆதாரத்தின்மீது நீ துவக்குகிறாய்; பிரபஞ்சத்தைப் பற்றிய பிரச்னையின் உனது விளக்கம் எவ்வாறு சரியானதாய் இருக்கும்?'' என்று ஹிந்து கேட்கின்றான்.

வேதாந்திகள் விழிப்பு நிலையினைத் தங்களுக்கு வரம்பாக்கிக் கொள்கிறார்கள். மில், ஹாமில்டன், பெர்க்ளீ, ஸ்பென்சர் கூட—இவர்கள் யாருமே தாங்கள் கண்டுபிடித்த நுட்பங்களையும், தங்கள் ஆராய்ச்சிகளையும், விழிப்பு நிலையில் அடைந்துள்ள அனுபவத்தினை மாத்திரமே ஆதாரமாகக் கொண்டு இயற்றியிருக் கிறார்கள். எல்லாச் சக்திக்கும், எல்லாச் செயல்திறனுக் கும் அல்லது தாங்கள் வேறு எப்பெயரிட்டு அழைக்கும் அதற்கும் மூலாதார ஊற்றை, விழிப்பு நிலை அனுப வத்திலேயே அவர்கள் காண விழைகின்றார்கள்.

ஆனால், இங்கே கவனியுங்கள். உங்களுக்கு ஓர் கணிதப் பிரச்னை போடப்படுவதற்காக வைத்துக் கொள் ளுங்கள். அதற்கு முடிவான விடை தர வேண்டுவதாக

வைத்துக் கொள்ளுங்கள். அப் பிரச்னையின் எல்லா அம்சங்களையும், பூரண ஆதாரத்தையும் நீங்கள்கவனிக்க வேண்டும். ஆதாரத்தின் ஒரு பாகத்தை மாத்திரம் கணித்துக் கொண்டீர்களாயின், ஒரு கணக்கின் சரியான விடையை நீங்கள் எப்படிக் கண்டுபிடிக்க இயலும்? வேதாந்தம் முழு ஆதாரத்தையும் கணித்துக் கொள்கிறது.

உங்கள் ஆதாரங்கள் மூன்று வகையானவை. உங்கள் உலக அனுபவங்கள் மூன்றுவகையானவை. இவை யாவற்றையுமே கவனித்தல் வேண்டும். வேறு இரண்டு நிலையிலும், விழிப்பு நிலை உலகம் அடியோடு மறைந்துவிடுகிறது. என்றாலும் நீங்கள், அதாவது உங்கள் ஆன்மா, கனவு நிலையிலேயே வாழ்கின்றது. ஆழ்ந்த நித்திரை நிலையிலோ, நீங்கள் மாய்ந்து போகின்றீர்கள்; மாய்ந்து போகின்றீர்களா? ஆழ்ந்த நித்திரையிலே, அறிவும் தானென்னும் உணர்வும் அடியோடு போகின்றன; ஆனால், உண்மையான ஆன்மா—உண்மையான நீங்கள்—உள்ளவாறு இருக்கின்றீர்கள். திரிபற்ற, குறைவற்ற இத் தத்துவம், இவ் வுண்மை, உங்கள் உண்மையான ஆன்மாவிலே, இம் மூவகை உலகத்திலெல்லாம் உலவுகிறது,

மனத்தையோ, அறிவையோ, புத்தியையோ தானாக நீங்கள் நினைக்க உரிமையில்லை. உலகம் உள்ளதென நீங்கள் எவ்வாறு அறிகின்றீர்கள்? இப் பிரபஞ்சம் உள்ளதென நீங்கள் எவ்வாறு தெரிகின்றீர்கள்; பொருள்களைத் தீண்டுகிறீர்கள்; பொருள்களைக் காண்கின்றீர்கள்; பொருள்களைக் கேட்கின்றீர்கள்; பொருள்களை நுகர்கின்றீர்கள்—இந்த ஒரு ருசு தான் உண்டு.

"விக்டர் ஹியுகோ, ராபர்ட் இங்கர்சால், எமர்ஸன் ஆகியோரெல்லாம் இங்கே இருந்திருக்கிறார்கள். இம்

மகத்தான சிந்தனையாளர் எல்லாம் இவ்வுலகைப் பற்றி எவ்வளவோ எழுதியிருக்கிறார்கள். ஆகையால் உலகம் உள்ளதாகவே இருக்கவேண்டும்" என்று நீங்கள் கூறுவீர்களாயின், இந்தச் சமய நூல்கள் எல்லாம் இங்கு உள்ளன என்று நீங்கள் எவ்வாறு அறிகின்றீர்கள் என நாம் வினவுகின்றோம். புலன்களின் மூலமே அவை உள்ளன என்று நீங்கள் அறிகின்றீர்கள். இவ்வுலகம் உள்ள தென்பதற்கு நேர்முகமாகவோ, மறைமுக மாகவோ, உங்கள் புலன்கள்தான் ருசுவாய் இருக்கின்றன.

உணர்வு, அறிவு ஆகிய யாவற்றுக்கும் புலனுணர்வு மூலாதாரமாக இருக்கின்றது. புலனுணர்வு உங்கள் விழிப்பு நிலையில் அடைந்து கிடக்கவில்லை. உங்கள் புலன்கள் பருமை உருவந்தாங்கி நிற்கின்றன. ஆனால், உங்கள் கனவிலும், புலனுணர்வும் அறிவுணர்வும் உங்களுக்கு இல்லையா? அச் சமயத்திற்கேற்ற விசேஷப் புலன்கள் உங்களுக்கில்லையா? புறக்கண்களும், புறச் செவிகளும் அப்பொழுது அலுவல் புரியவில்லை. கன வுலகிலே, புலனுணர்வுக்குரிய பொருள்களையும், அவற்றை உணரும் பொறிகளையும் சேர்ந்தாற்போல, நீங்கள் சிருஷ்டித்து விடுகின்றீர்கள். கனவுலகிலே, இவ்வாறாக, ஒரே மின்சார சக்தியும் நேரும் மறையுமான இரு அம்சங்கள் போலவும், ஒரே காசின் தலையும் பூவும் போலவும், புலன்களையும், புலன் நுணர் பொருள்களையும் காண்கின்றோம். கனவுகளிலே கர்த்தாவும் செயப்படு பொருளும் ஒரு சேர எழுகின்றனர்.

புலன்கள் எவற்றால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன? பூதங்களாலேயே. இப் பூதங்களை நீங்கள் எவ்வாறு அறிகின்றீர்கள்? புலன்களின் மூலமே. விழிப்பு

நிலையிலுள்ள உலகின் மாயையை இது நிருபிக்கிறது. கனவுலகில், நீங்கள் எதுவரை கனவு கண்டு கொண்டிருக்கிறீர்களோ, அதுவரையில் தான் பொருள்கள் எல்லாம் உண்மையாக இருக்கின்றன. விழிப்பு நிலையிலே அவை யெல்லாம் மறைந்தொழிகின்றன. அவ் விழிப்பு நிலையில் யாவும் கடுமையாக இருக்கின்றன. ஆழ்ந்த நித்திரை நிலையிலே எங்கே இந்த உலகம்? எங்குமில்லை; போய்விட்டது—போய்விட்டது! உண்மை பற்றிய விவரணம் விழிப்பு நிலை அல்லது கனவு நிலைத் தோற்றத்துக்குப் பொருந்துவதல்ல என்பதை இதனுல் காணுங்கள்.

எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நிலைத்திருப்பதையே உண்மையென இந்துக்கள் விவரிக்கின்ருர்கள். ஒரு சமயத்தில் தோன்றி, சிறிது நேரத்திற்குப் பின்னர் மறைவதான ஒரு தோற்றம் மாயையாயிருக்கவேண்டும். உண்மையைப் பற்றி ஹெர்பர்ட் ஸ்பென்சரும் இதே லட்சணம் கூறியிருக்கிருர்.

கனவுலகம் உண்மையல்ல வென்று நீங்கள் ஏன் கூறுகின்றீர்கள்? ஏனெனில், நீங்கள் விழிக்கும் பொழுது அது போய்விடுவதாலேயே. அங்ஙனமாயின் உண்மையின்மைக் குரிய அதே லட்சணம் விழிப்பு நிலைக்கும் பொருந்துவதன்ருே? கனவுலகிலோ ஆழ்ந்த நித்திரை உலகிலோ இருக்குங்காலை, விழிப்பு நிலை உலகம் மறைந்து விடுகின்றதே?

மனிதனுடைய இதயத்தை எத்தகைய தவருன எண்ணம் பற்றிக் கொண்டிருக்கிறது! சிலர் கூறுகின்ருர்கள்—"என்னிடம் சுனை போன்ற பணம், சுனை சுனை போன்ற பணம் இருக்கிறது. இந்தப் பெருமையான, ஸ்தூலமாகக் காணப்படும் உலகம் உண்மை,"

“ஏ மூடனே! நிச்சயமான உண்மை நீயேதான்; திரிபற்ற நித்திய தத்துவம் நீயே; அதுவே நிச்சய மானது. பாக்கியுள்ள யாவும் புலன்களின் செப்பிடு வித்தையாகும்” என்றால், இந்த முடிவைச் சில மனிதர்கள் அங்கீகரிக்க மாட்டேனென்கிறார்கள். ஏனென்றால் விழிப்பு நிலைக்கு எதிராக, கனவு நிலையும் தூக்க நிலையும் எடுத்துக் கொள்ளப்பட்டு, இது நிச்சயிக்கப் படுவதாலேயே. அவர்களுக்குச் சில வார்த்தைகள்.

இந்தப் பிரம்மாண்டப் பூச்சியமான மண்ணுலகில் எப்பொழுதும் ஒரு பாதிக்கு மேல் இரவு இருந்துகொண் டிருக்கிறது. ஏறக் குறைய இம் மண்ணுலகின் பாதி ஜனங்கள் எப்பொழுதும் கனவிலோ அல்லது ஆழ்ந்த தூக்க நிலையிலோ இருந்து கொண்டிருக்கிறார்கள். எவ்விடத்திலுள்ள எவரும் விழிப்பனுபவத்தில் எவ்வளவு நேரத்தைக் கழிக்கிறார்களோ அவ்வளவு நேரத்தைத் தூக்க அனுபவத்திலும் கழிக்கின்றார்கள். குழந்தைப் பருவ முழுவதுமே ஒரு நீண்ட தூக்கமல்லவா? மரண மும் தூக்கமே. நல்லது; முதல் மூன்று அல்லது நான்கு வருஷ காலம் நீங்கள் முற்றிலும் தூக்கத்தில் கழித்து விட்டீர்கள். இப்பொழுது கணக்கிடுங்கள். நீங்கள் விழிப்பு நிலையில் செலவழித்த நாழிகைகளை. உங்கள் வாழ்வில் ஒரு பாதி தூக்கத்திலும், இன்னொரு பாதி விழிப்பிலும் கழித்திருப்பதைக் காண வியப்புறுவீர்கள்.

விழிப்பு நிலையிலே நிகழ்ந்தவற்றை மாத்திரம் எடுத்துக் கொண்டு, தூக்க நிலையிலே நிகழ்ந்தவற்றைத் தள்ளிவிட உங்களுக்கு என்ன உரிமை? நீங்கள் தூங்கும்பொழுது செத்தா போகிறீர்கள்? இல்லை. உங்கள் கனவுநிலை அனுபவங்களும் அனுபவங்களே; அவற்றை ஏன் நீங்கள் கணித்துக் கொள்ளலாகாது? விழிப்பு நிலை சக்திமிக்கதென்பீர்களாயின், மிக்க

வலியரும் மிக்க அறிஞரும்கூட விலக்கின்றி, தூக்கத்தால் காலும் கையும் முடக்கப்பெற்று, ஒவ்வோர் இரவும் சோபாவிலும் கட்டிலிலும் ஏன் படுத்துகிடக்கின்றூர்கள்? நித்திரா தேவியின் வணங்கா வலிமை, அவர்கள் விழித்திருக்க எவ்வளவு ஊக்கமான ஆசை கொள்ளலிலும், அதைக் காண்பதில்லை. விழிப்பு நிலையைப் போலவே, தூக்க நிலைக்கும் சொந்தமாக ஓர் உலகம் இருக்கிறது. இவ்வாருக, விழிப்புலகம் நமது கவனத்திற்கு ஏதும் பாத்தியமுடையதாயின், கனவுலகமும் நன்கு கவனிக்கத் தக்கதேயாகும்.

இவ்வுலகங்கள் எல்லாம் தோற்றமயமானவை. உங்கள் தூக்க நிலையிலேயே நீங்கள் ஓர் ஓநாயைக் காண்கிறீர்கள். அவ் வோநாய் உங்களை விழுங்கி விடுகின்றது. நீங்கள் அஞ்சுகிறீர்கள். ஆனுல், நீங்கள் காண்பது ஓநாயல்ல; உங்களையேதான். ஆதலால் வேதாந்தம் கூறுகிறது:—"விழிப்பு நிலையிலும் கூட, உனது நண்பனும் பகைவனுமாயிருப்பது நீயே. நீயே வாவியும், அதில் விழும் சூரிய பிம்பமும்; நீயே விளக்கும் விட்டிலும், உனக்கு உள்ள மிகக் கொடும் பகைவனும் நீயே, வேறெவனும் அல்லன்."

"நண்பனும், பகைவனுமான உருவமும், படமும் வெறும் கனவே. நீயே நண்பன்; நீயே பகைவன். நேற்று நீ புரிந்த செயல்கள் இன்று உன்னேடு இருக்கின்றனவா? அவை போயொழிந்தன. நேற்றையப் பொருள்கள்! அவை எங்கே? அவை போயொழிந்தன வல்லவோ? இந்தப் பொருளில் விழிப்பு நிலையும் கனவே யாகும். உண்மையான, நிச்சய நியதி, கண்டிப்பான உண்மை; அவற்றிற்கும் பின்னுல் உள்ளது, அதுதான் உண்மையான ஆன்மா, அதை அறிந்து அனுபவியுங்கள்.

# கேள்வியும் பதிலும்

காந்தியடிகள்

கேள்வி: கெட்ட எண்ணங்களை ஜயிக்க முடியாமல் போராடும் வாலிபர்கள் உங்களிடம் வந்தால் நீங்கள் என்ன உபதேசம் செய்வீர்கள் ?

பதில்: வாழ்க்கை அரங்கத்தில் புத்தி நம்மைக் கொஞ்ச தூரத்தான் அழைத்துச் செல்லக்கூடும். சோதனைக் காலத்தில் அது பயன்படாது. ஈசுவர நம்பிக்கை அப்போது புத்தியைவிட ஓங்கியிருக்கும். புத்தியின் சக்தி தோல்வி அடையும் காலத்தில்தான், தெய்வ நம்பிக்கை பிரகாசமாய் விளங்கி நம்மைக் கை தூக்குகிறது. நம் வாலிபர்களுக்கு அத் திடநம்பிக்கை தான் அவசியம் வேண்டும். அகங்காரத்தைக் கைவிட்டு ஈசனிடம் சரணாகதி அடைந்தால்தான் அத் தீவிர நம்பிக்கை ஏற்படும்.

கேள்வி: நாஸ்திகரை எப்படிக் கடவுளிடமும் சமயத்திலும் நம்பிக்கை கொள்ளும்படி திருப்புவது ?

பதில்: ஒரே ஒரு வழிதான் உண்டு. கடவுளின் உண்மையான பக்தன், தனது தூய்மையாலும் நன்னடத்தையாலும் நாஸ்திகனைத் திருப்பிவிடலாம். தர்க்கத்தினால், ஒரு போதும் அதைச் செய்ய முடியாது. கடவுள் உண்டு என்பதை நிரூபணம் செய்ய எண்ணற்ற புத்தகங்கள் எழுதப் பெற்றுள்ளன. அத்தனை நூல்கள் இருந்தும் நாஸ்திகம் அதிகரித்துக் கொண்டே

யிருக்கிறது. ஆனால், தன்னை நாஸ்திகன் என்று கூறிக் கொள்ளும் மனிதன், பெரும்பாலும் உண்மை நாஸ்திகனாக யில்லை; ஆஸ்திகரிலும் அநேகர் ஆஸ்திகராயில்லை.

நாஸ்திகர் சில சமயம், "நீர் ஆஸ்திகர் ஆனால், நாங்கள் நாஸ்திகர்தான்'' என்று கூறுகிறார்கள். அப்படிச் சொல்ல அவர்களுக்கு உரிமை உண்டு. ஏனெனில், தங்களுக்கு ஆஸ்திகர் என்று தாங்களே பெயர் சூட்டிக் கொண்டோர் பெரும்பாலும் உண்மை ஆஸ்திகராய் இல்லை. ஒரு கௌரவம் என்று அதைக் கருதியோ. அல்லது உலகத்தை ஏமாற்றவோதான் அநேகர் கடவுளை வணங்குகின்றனர். அவர்களுக்கு எப்படி நாஸ்திகர்மீது செல்வாக்கு ஏற்படமுடியும் ?

தாம் கடவுளுக்கு உண்மையாய் நடந்து கொண்டால், தம் அண்டை அயலார் தம்மிச்சையாகவே நாஸ்திகத்தை விட்டுவிடுவார்கள் என்று ஆஸ்திகர் உணர வேண்டும். முழு உலகத்தையும் பற்றி அவர் தொல்லைப் பட வேண்டாம். கடவுள் இடங்கொடுத்திருப்பதாலேயே நாஸ்திகரும் உலகில் இருக்கிறார்கள் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். பெயரளவில் கடவுளை வணங்குவோர் ஆஸ்திகரல்லர். கடவுளின் சித்தத்தை நிறைவேற்றுவோரே ஆஸ்திகர் என்ற வசனம் மிக உண்மையாகும்.

கேள்வி: வியாதி என்ன வென்று கண்டு பிடிப்பதற்கு ஆயுர்வேத வைத்தியர்களிடம் செல்லாமல் நீங்கள் இங்கிலீஷ் டாக்டர்களிடம் செல்வது ஏன் ?

பதில்: உடலைப் பற்றி டாக்டர்களுக்குத் தெரிந்திருப்பது போல வைத்தியர்களுக்குத் தெரிந்திருக்க வில்லை. ஆயுர் வேதத்தில் வியாதி நிர்ணயத்திற்கு அஸ்திவாரமாய் இருப்பது திரிதோஷக் கொள்கையாகும். அதுகூட

அவர்களுக்குப் பூரணமாகத் தெரியாது, டாக்டர்களோ சதாகாலமும் ஆராய்ச்சி நடத்திக் கொண்டும், புதிது புதிதாகக் கண்டு பிடித்துக் கொண்டும் இருக்கிறார்கள். யாராலும் முன்னேறவிட்டால் பின்னாலேயே போய் விடுவர். எதுவும் நின்ற இடத்திலேயே நின்று விடுவார்கள். நின்ற இடத்திலேயே நின்று விடுபவர் உயிரற்றவரே. அப்படி நின்றும் உயிரோடு இருப்பவர் கடவுள் ஒருவரே. சொன்னால் ஆச்சரியமாகத்தான் இருக்கும்; ஆனால் அதுதான் உண்மை. கடவுள் ஒருவரைத்தான் எப்பொழுதும் அசைந்து கொண்டிருப்பவராகவும், ஒருபொழுதும் அசையாதவராகவும் கூறமுடியும்.

அத்துடன் டாக்டர்கள் என்னுடைய நண்பர்களாய் இருக்கிறார்கள். டாக்டர்கள் என்னைவிட்டுப் பிரியாமலும் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் என்னுடைய குமாரத்திக்கும் மேலாக ஆகி விட்டார். குமாரியாய் இருக்க வேண்டுமென்று வந்தவர் எப்படிப் பிரிந்துபோக முடியும் ?

வியாதியை நிர்ணயிப்பதற்கு டாக்டர்கள் கையாளும் முறையைத்தான் வைத்தியர்களும் அரை குறையாகக் கையாளுகிறார்கள், அல்லது அதற்காக டாக்டர்களிடம் சொல்லுமாறு நோயாளிகளை அனுப்பி வைக்கிறார்கள். அவர்களுக்குச் சில மருந்துகள் தெரியும்; அதைப் பயனுற உபயோகிக்கிறார்கள்.

ஆனால் டாக்டர்கள், வைத்தியர்கள், ஹகீம்கள் எல்லோரும் பணத்துக்காகவே பாடுபடுகிறார்கள். இந்தத் தொழிலைச் சேவை செய்ய வேண்டும் என்ற ஆசையின் பேரில் மேற்கொள்ளவில்லை. அத்தகைய ஆசை சிலரிடம் காணப்படுவதைக் கொண்டு என் கூற்றைத் தவறு என்று சொல்ல முடியாது.

சுயநலமில்லாத சேவைக்காக ஏற்பட்ட சிகிச்சை முறை இயற்கை முறை. இன்று அதுவும் கூடப் பணந்தேடுவதற்கான வழியாகவே ஆகிவிட்டது. ஆகவே பணமானது கடவுள் ஸ்தாபனத்தில் வந்து அமர்ந்து கொண்டு விட்டது.

டாக்டர்கள் என்னைப் பரிசோதித்த போதிலும் நான் கடவுளையேதான் நம்பி யிருக்கிறேன். அவரே என் ஜீவனுக்கு அதிகாரி. அவர் இஷ்டப்பட்டால் என்னை நூற்று இருபத்தைந்து ஆண்டுகள் வாழச் செய்வார். இன்றேல், டாக்டர் நண்பர்கள் கண் முன்னு லேயே என்னை எந்த நிமிஷத்திலும் அழைத்துக் கொள்வார்.

கேள்வி: விஷயமறியாத ஜைனர்கள் உங்களை ஒரு ஜைனராகவே கருதுகிறார்கள். தாங்களும் அவ்வித மாகக் கருதப்படுவதற்கு வெட்கப்படவுமில்லை. அப்படி யிருந்தும் தங்கள் 'ஹரிஜன்' பத்திரிகையில் மகா வீர ருடைய பெயரைக்கூட கூறுமலிருப்பதற்கு வெகு ஜாக் கிரதையாக நடந்து கொள்வது போல தோன்றுகிறது, தங்களைப் போன்ற மகாத்மாவுக்கு இது அழகாகுமா ?

பதில்: ஒரு நிருபருடைய கேள்வியை நான் சுருக்கி யிருக்கிறேன். இந்தச் சுருக்கத்திலிருந்தே அவருடைய கடிதத்தின் வாசகம் எப்படி யிருக்கும் என்று வாசகர்கள் ஊகித்துக் கொள்ளலாம்.

நான் ஒரு ஜைனன் இல்லை என்ற குற்றத்தை ஏற்றுக் கொள்கிறேன். ஆயினும் ஜைனர்கள் என்று சொல்லிக் கொள்கிறவர்களில் பலரைவிடக் கூட, நான் மகா வீரருடைய உபதேசங்களை அதிகமாய் அறிந்த பக்தன் என்று கூறுவேன். அப்படியே நான் மகாவீர ருடைய அடியனுக இல்லாதிருந்தாலும் அதனுல்

அவருக்கோ அவருடைய அடியார்களுக்கோ எவ்வித நஷ்டமும் உண்டாகப் போவதில்லை. நஷ்டம் உண்டானால் எனக்குத்தான் நஷ்டம்.

நாம் வணங்கிப் போற்றுகிறவர்களைப் பற்றி, நம் பக்கத்திலிருப்பவர்கள் அலட்சியமாக இருந்தால் அதற்காக வருந்துவதோ அல்லது கோபிப்பதோ நமது பலவீனத்தைக் காட்டும்.

கேள்வி: கடவுளை அறிவு மூலமாக அறிய முடியாது. நம்பிக்கை மூலமாகத்தானே அறிய முடியும்? நீங்கள் மறு ஜன்மத்தை நம்புகிறீர்களா? அது கஷ்டப்படுகிற ஜனங்கள் தம்மைத் தாமே தேற்றிக் கொள்வதற்காக ஹிந்து மகரிஷிகள் ஏற்படுத்திய கொள்கையா?

பதில்: கடவுளை அறிவால் அறிய முடியாது. அறிவு கொஞ்சதூரந்தான் விஷயத்தை விளக்கிக் காட்டும். கடவுளை நம்பிக்கை மூலமாகவும், நம்பிக்கையால் பெறும் அனுபவம் மூலமாகவும்தான் அறிய முடியும்.

நாம் பெரியோர்களுடைய அனுபவத்தை நம்ப வேண்டும்; அல்லது நாமே அனுபவத்தின் மூலம் அறிந்து கொள்ளவேண்டும். பூரணமாக நம்புகிறவர்களுக்கு அனுபவம் உண்டாகாமல் போகாது. நன்மை தீமை வேறுபாடு ஒரு மனச்சமாதானத்துக்காக ஏற்பட்டதன்று. கடவுள் நம்பிக்கையும் அதற்காக ஏற்பட்டதன்று. நன்மை, தீமை, மறுஜன்மம் என்பன ரிஷிகளால் ஏற்படுத்தப் பெற்ற உண்மைகளாகும். மறு ஜன்மம் உண்டென்னும் கொள்கையை அறிவினுல் அறிந்து கொள்ள முடியும் என்பது என் எண்ணம்.

கேள்வி: தாங்கள் நகரங்களைச் சமூக உடம்பில் புறப்படும் கட்டிகள் என்று கூறுகிறீர்களே, அந்தக் கட்டிகளை என்ன செய்ய வேண்டும்?

பதில்: டாக்டரிடம் கேட்டால் கட்டிக்குச் செய்ய வேண்டுவது இது என்று சொல்லுவார். கட்டியைக் கீறியும் குணப்படுத்தலாம். எட்வர்ட் கார்ப்பெண்டர் என்னும் ஆங்கில அறிஞர், நாகரிகத்தை குணப்படுத்த வேண்டிய நோயாகவே கூறினர். பெரிய நகரங்கள் வளர்ந்து வருவது அந்நோயைக் காட்டும் அறிகுறியே யாகும்.

நான் இயற்கை வைத்தியன். ஆனல் உடம்பைச் சுத்தம் செய்வதன் மூலம் குணப்படுத்தும் இயற்கைச் சிகிச்சை முறையையே நான் ஆதரிப்பேன். நகரங்களில் வாழ்வோருடைய மனமானது, கிராமங்களையே நாடு மானல் எல்லா விஷயங்களும் சரியாய்விடும். கட்டி வெகு சீக்கிரத்தில் ஆறிவிடும்.

# பொட்டாசியம் குளோரேட்டு

P. B. ஸ்ரீரங்கன்

பொட்டாசியம் குளோரேட்டு என்றவுடன் முதலில் நம் நினைவிற்கு வருவது நெருப்புப் பெட்டிதான். மனிதனின் நாகரிக வளர்ச்சிக்கே காரணமாயிருந்தது நெருப்பு அல்லவா? ஆதி மனிதன் கற்கள் ஒன்றோடொன்று உராயும்போது நெருப்புப் பொறி உண்டாவதை தற்செயலாகக் கவனித்து, பிறகு தானே இரண்டு சிக்கிமுக்கிக் கற்களைத் தேய்த்து நெருப்பு உண்டாக்கி உணவை பக்குவப்படுத்திக் கொள்ளவும், மற்ற வகைகளிலும் உபயோகித்துக் கொள்ளவும் ஆரம்பித்தான். அதிலிருந்து படிப்படியாக முன்னேற்றம் ஏற்பட்டு தற்காலத்தில் நாம் சர்வ சாதாரணமாக நெருப்புப் பெட்டியை உபயோகிக்கிறோம். நெருப்புப் பெட்டி தயாரிப்பதிலும், வெடி மருந்து தயாரிப்பதிலும் முக்கியமாக உபயோகிக்கப்படும் ரசாயனப் பொருள் பொட்டாசியம் குளோரேட்டுதான்.

வெடி மருந்து தயாரித்தல் நம் நாட்டில் அதிகமாயிருந்த போதிலும், பொட்டாசியம் குளோரேட்டின் உற்பத்தி சமீப காலம் வரையில் ஆரம்பிக்கப்படவேயில்லை. இப்போதுகூட தயாரிக்கப்படும் அளவு மிகக் குறைவுதான்—வருஷத்திற்கு சுமார் 1500 டன்களே. அமெரிக்காவின் வருஷ உற்பத்தி சுமார் 25,000 டன்கள். ஆனால் நம் நாட்டில் தீக்குச்சி உற்பத்தி வெகுவாகப் பெருகியிருக்கிறது. மேலே குறிப்பிட்டபடி இதற்கு

வேண்டிய முக்கிய மூலப்பொருள் பொட்டாசியம் குளோ ரேட்டுதான். எனவே, ஏராளமான குளோரேட்டை இறக்குமதி செய்யவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. 1940-ம் ஆண்டிற்கு முன்பு நாட்டின் பூரா தேவையும் இறக்குமதி செய்யப்பட்டு வந்தது. இரண்டாவது உலக யுத்தத்தின் காரணமாக இறக்குமதி தடைப்பட்டபோது நம் நாட்டின் உற்பத்தி விரிவடையத் தொடங்கிற்று அநேக சிறிய தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. 1945-ம் ஆண்டிற்குப் பிறகு பொட்டாசியம் குளோரேட்டின் உற்பத்தி இரு மடங்காகப் பெருகி இருக்கிறது. ஆனால் சோடியம் குளோரேட்டு இப்போதுகூட நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதில்லை. அமெரிக்காவில் மட்டி லும் ஆண்டுக்கு சுமார் 15,000 டன்கள் சோடியம் குளோரேட்டு களைகளை அழிப்பதில் உபயோகமாகிறது. நம் நாட்டிலும், முக்கியமாக ரயில் இலாகாவில் இவ் வழியை பின்பற்றினால் எவ்வளவோ லாபகரமாயிருக்கும். இதற்கு தேவையான சோடியம் குளோரேட்டை சுலப மாக நம்மால் தயாரித்துக்கொள்ள முடியும்.


1945-ம் ஆண்டுக்கு முன்னர் இருந்ததைவிட இப் போது பொட்டாசியம் குளோரேட்டின் உற்பத்தி இரட் டித்து இருந்தபோதிலும், நம் நாட்டின் தேவைக்கு போத வில்லை. வருஷம் ஆயிரம் டன்களுக்கு மேலாகத் துண்டு விழுகிறது. அம்பர்நாத்திலிருக்கும் விம்கோ (Wimco) தொழிற்சாலை ஒன்றே நம் நாட்டின் மொத்த உற்பத்தி யில் முக்கால் பங்கு தயாரிக்கிறது. ஆனால் அது அநேக மாக அவர்களுடைய தீப்பெட்டி தொழிற்சாலைகளுக்கே சரியாய்ப் போய்விடுகிறது. தென்னிந்தியாவில் திருவாங்கூரிலிருக்கும் குண்டாரா என்னுமிடத்தில் ஒரு சிறிய தொழிற்சாலையில் வருஷத்திற்கு சுமார் 300 டன்கள் தயாரிக்கப்படுகிறது.

மேலே குறிப்பிட்டபடி நாட்டின் தேவை பெருகிக் கொண்டே வந்திருப்பதால் இறக்குமதி அதிகமாகிக் கொண்டே வந்திருக்கிறது. இவ் விஷயத்தை நம் அரசாங்கம் நன்கு உணர்ந்து, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதன் உற்பத்திக்கு முக்கிய ஸ்தானம் கொடுத்திருக்கிறார்கள். 1960-61-ல் உற்பத்தி சுமார் 4000 டன்களாகப் பெருகியிருக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இரண்டு புதிய தொழிற்சாலைகள் ஆரம்பிக்க அனுமதியளிக்கப் பட்டிருக்கிறது. அவற்றில் மேட்டூரிலிருக்கும் மேட்டூர் கெமிகல்ஸ் அண்ட் இன்டஸ்டிரியல் கார்ப்போரேஷனும் ஒன்று. இங்கு வருடத்திற்கு சுமார் 6000 டன்கள் தயாரிக்க ஒரு தொழிற்சாலை நிறுவ ஏற்பாடுகள் துரிதமாக நடந்து கொண்டிருக்கின்றன. சென்டிரிப்யூஜ் பம்பு (Centrifuge Pump) முதலிய சில முக்கியமான யந்திரங்களைத் தவிர மற்றவை யாவும் அங்கேயே தயாரித்துக் கொள்ளப்படும்.

தயாரிக்கும் முறைகள்

பழைய முறை 1842-ம் ஆண்டில் லீபி (Leibig) என்பவர் தான் முதன் முதலில் நீற்றின சுண்ணாம்பில் (Calcium Hydroxide) குளோரின் வாயுவை செலுத்தி கால்சியம் குளோரேட்டைத் தயாரித்தார். இதனுடன் பொட்டாசியம் குளோரேட்டைக் (Potassium Chloride) கலந்து, இச் சேர்க்கையால் கிடைக்கும் பொட்டாசியம் குளோரேட்டு கரைசலை வற்றக் காய்ச்சி நீரை அகற்றுவதால் பொட்டாசியம் குளோரேட்டு உப்பு கிடைத்தது. காய்ச்சுவதற்குப் பதிலாக அந்தக் கரைசலை நன்குகக் குளிர வைத்தாலும் (சுமார்—5 சென்டிகிரேட் வரை) உப்பு வெளிப்பட்டு விடும். மேட்டூர் கெமிகல் ஆராய்ச்சி சாலையில் மும்முறை சோதனை செய்யப்பட்டு, இம்முறையிலும் விலையதிகமாகாமல் சுத்தமான உப்பு கிடைக்கும்

என்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. படத்திலிருந்து முறையின் விவரங்களை எளிதில் தெரிந்து கொள்ளலாம்.




- ரசாயன முறை.

ஓர் இருப்பு தொட்டியில் தெளிந்த கால்சியம் குளோரேட் கரைசலை எடுத்துக்கொண்டு அதனுடன் பொட்டாசியம் குளோரைடு கலக்கப்படுகிறது. தொட்டியினுள்ளிருக்கும் இரும்புக் குழாயின் மூலம் குளிர்ந்த உப்பு நீர் பாய்ச்சி கரைசலை குளிர வைக்கப்பட்டும் பொட்டாசியம் குளோரேட்டு உப்பு பிரிந்து அடியில் தங்கும். அது ஒரு சென்டிரிப்யூஜின் உதவியால் தாய்த் திரவத்தினின்றும் பிரிக்கப்பட்டு வேரோரு தொட்டிகளில் குளிர வைத்தால் சுத்தமான குளோரேட்டு வெளிப்படும். சென்டிரிப்யூஜின் உதவியால் பிரித்து எடுக்கப்படும்.

நவீன முறை, தற்காலத்தில், மேற்கூறிய ரசாயன முறை பின்பற்றப்படுவதில்லே. பெரும்பாலும் மின்பிரிவு முறையே எங்கும் உபயோகத்திலிருக்கிறது. இம்முறையினல் குளோரேட்டின் கொள்விலே ஒன்றுக்குப் பாதியாகக் குறைந்து விடுகிறது. முறையும் சிக்கலின்றி எளிதாகவும், சுத்தமானதாகவும் இருக்கிறது.

சென்ற நூற்ருண்டின் இறுதியில், கால் (Galle) மான்ட்லார் (Montlaur) என்பவர்கள் மின் பிரிவு தயாரிப்பு முறையை முதலில் கண்டு பிடித்தார்கள். இம்முறையில் ஒரு மின்கலத்தில் (Cell) குளோரைடு (Chloride) கரைசலுக்குள் நேர் மின்சாரம், பிளாட்டினம், நிக்கல் மின் முனேகளின் வழியாகச் செலுத்தப்பட்டது. மின் கலத்தின் நடுவில் ஒரு இடைத் திரையை (Diaphragm) வைத்து இரு பாகங்களாக பிரிக்கப்பட்டது. இருபாகங்களிலுமுள்ள திரவங்களே வெளியே கொண்டு வந்துபிறகு ஒன்ருகக் கலக்கப்பட்டது. அப்படியும் இம்முறையின் திறன் (Efficiency) சுமார் 25 சத விகிதம் தானிருந்தது. இருந்தபோதிலும் முறையின் எளிமையால் இதுவே அனுசரிக்கப்பட்டு வந்தது. மேலும் பல விஞ்ஞானிகள் இம் முறையின் திறனே அதிகரிப்பதற்காகத் தொடர்ந்து ஆராய்ச்சிகள் செய்து வந்தனர். எரிக் முல்லர் (Erich (Muller)என்பவர் இதில் வெற்றி கண்டார். குளோரைடு கரைசலுடன் ஹைடிரோகுளோரிக் அமிலத்தையும் (Hydrochloric Acid), சிறிதளவு டைக்ரோமேட்டு கரைசாலேயும் (Dichromate Solution) கலந்து கொண்டால், முறையின் திறன் வெகுவாக உயர்ந்து சுமார் 80-85 சத விகிதம் கிடைக்குமென்று கண்டார். இடைத்திரையின் வேலேயை டைக்ரோமேட்டு செய்து விடுவதால், இடைத் திரை அவசியமில்லே யெனவும் நிரூபித்தார். மேலும், தங்கத்தைப் போன்று விலேயுயர்ந்த பிளாடினத்துக்குப்

பதிலாக, கிராபைட்டு (grophite) என்னும் ஒரு வித கரித் தகட்டையே நேர் மின் முனையாக உபயோகிக்கலாம் என்றும் கண்டுபிடித்தவுடன், மின்சார முறையே எங்கும் கையாளப்பட்டது.

சாதாரண இரும்பாலான தொட்டி மின்கலமாகவும், பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட கிராபைட்டுத் தகடு நேர் மின் முனையாகவும், இரும்புத் தகடு எதிர் மின் முறையாகவும் உபயோகிக்கப் படுகின்றன. மற்ற மின் கலன்களைப் போலவே இவை காலத்தில் மாறி மாறி சிறு இடைவெளியுடன் பொருத்தப் பட்டிருக்கும் கலத்தின் வழியே சோடியம் அல்லது பொட்டாசியம் கரைசல் தொடர்ந்து செலுத்தப்படும். மின் முனைகளின் வழியே நேர் மின்சார சக்தி பாய்ச்சப்படும். மின்னோட்டத்தின் அளவு சுமார் 10,000 ஆம்பியர்கள் இருக்கும். காலத்தில் தொடர்ந்து ஹைடிரோகுளோரிக் அமிலமும், டைக்ரோமேட்டு கரைசலும் சேர்ந்துக்கொண்டே யிருக்கப்படும் மின்னோட்டத்தின் அளவு கிராபைட்டு தகட்டின் விஸ்தீரணம், கரைசலின் சூடு முதலியனவற்றைப் பொறுத்திருக்கிறது. இம்முறையின் திறன் சூடு அதிகமானால், திறன் அதிகரிக்கும். ஆனால் கிராபைட்டு அதிகமாகக் கரைத்து விடும். இம்மாதிரி ஒன்றுக்கொன்று முரணான பல விஷயங்களைக் கவனித்து தேவைக்குத் தகுந்தபடி மாற்றியமைத்துக் கொண்டால்தான், சேதாரத்தைக் குறைத்து, உற்பத்தியை லாபகரமாகச் செய்ய முடியும். மின்கலத்தில் ஏற்படும் ரசாயன மாறுதல்கள் மிகவும் சிக்கலானவை. எனவே அவற்றை இங்கு விவரிக்கவில்லை.

கலத்திலிருந்து வெளி வருவது குளோரைடும், குளோரேட்டும், கலந்த கரைசல். இதை தொட்டிகளில் சேமித்து பிறகு நீரை வற்றக் காய்ச்சியோ, அல்லது

குளிர வைத்தோ. உப்பைப் பிரிப்பார்கள். ஆரம்பத்தில் சோடியம் குளோரைடை எடுத்துக்கொண்டால், இங்கு பொட்டாசியம் குளோரைடை சேர்த்து பொட்டாசியம் குளோரேட்டைப் பிரித்து எடுப்பார்கள். ஆரம்பத்தில் பொட்டாசியம் குளோரைடையே எடுத்துக் கொண்டிருந்தால் கரைசலை அப்படியே குளிர வைத்து விடலாம். சிக்கலில்லாமல் முறை மிகவும் எளிதாக இருக்கும். பொட்டாசியம் குளோரேட்டு உப்பு பிரிந்து அடியில் படிந்துவிடும். பிறகு அதை சென்டிரிப்யூஜின் உதவியால் பிரித்தெடுத்து உலர வைத்து, பொடியாக்குவார்கள். தாய்த் திரவத்துடன் வேண்டிய அளவு குளோரைடை சேர்ந்து மீண்டும் மின்கலத்தினுள் செலுத்துவார்கள்.

பண்புகள்

பொட்டாசியம் குளோரேட்டு தூய வெண்மை நிற முடைய படிகங்கள். 368° சென்டிகிரேடு உஷ்ணத்தில் உருகும். நீரில் கரையக்கூடியது; ஆனால் கரையும் அளவு சோடியம் குளோரேட்டை விட மிகக் குறைவு.

20 டிகிரி சென்டிகிரேட்டில் கரையும் அளவு

சோடியம் குளோரேட்டு — 50 சத. விகிதம்.

பொட்டாசியம் குளோரேட்டு — 7·5

இதனால்தான் கரைசலிலிருந்து பொட்டாசியம் குளோரேட்டு முதலில் வெளிப்படுகிறது.

ரசாயனப் பண்புகளில் முக்கியமானது இதனுடைய ஆக்சீகரணத் திறனே. இதிலிருந்து வெகு எளிதில் பிராணவாயு வெளிப்பட்டு விடுகிறது. அப்படியே சூடு செய்தால் சுமார் 600 டிகிரி சென்டிகிரேடிலும், மாங்

கனீஸ்டைஆக்சைடு (Manganess dioxide) என்னும் பொருளுடன் கலந்து சூடு செய்தால் 100 டிகிரிக்குள்ளாகவும் பிராணவாயு வெளிப்படுகிறது. அதே மாதிரி கரி, மரம் முதலிய சேதன ரசாயனப் பொருள்களுடன் சேர்ந்தாலும் பிராண வாயு வெகு வேகமாக வெளிப்படுகிறது. இக்குணமே வெடி மருந்து தயாரிப்பதில் பயன்படுத்தப்படுகிறது. பாஸ்வரம், ஆன்டிமனி ஸல்பைட் (Antimony Sulphide) முதலில் அசேதன ரசயானப் பொருள்களுடன் சேர்ந்தால் உண்டாகும். இதுவே தீக்குச்சி தயாரிப்பதில் பயன்படுத்தப் படுகிறது.

உபயோகங்கள்

மேலே கூறியபடி தீக்குச்சி தயாரிப்பதில்தான் பொட்டாசியம் குளோரேட்டு பெரும்பாலும் உபயோகப்படுகிறது. தீக்குச்சித் தொழில் ஆரம்பித்ததே பொட்டாசியம் குளோரேட்டின் உபயோகம் தெரிந்த பிறகுதான். மேலும், இது வெடி மருந்து, வாண வேடிக்கைப் பொருள்கள் முதலியன தயாரிப்பதிலும் வெகுவாகப் பயன்படுகிறது. உற்சவ காலங்களில் வெடிக்கப்படும் அதிர்வெடி, ஆகாய வாணங்கள், தீபாவளியின்போது குழந்தைகள் (குழந்தைகளுக்காக பெரியவர்கள் !) கொளுத்தும் பட்டாசுகள் எல்லாவற்றிலும் பொட்டாசியம் குளோரேட்டுதான் முக்கிய ஸ்தானம் பெற்றிருக்கிறது. வெடிகளேயில்லாத உற்சவங்களையும் தீபாவளியையும் யாரால் ரசிக்க முடியும்?

இவையன்றி வேறு சில உபயோகங்களும் உண்டு:–

1. களைகளையழிப்பதில் சோடியம் குளோரேட்டு பயன்படுகிறது.

2. மருத்துவத்தில் வாய் வேக்காடு, தொண்டை வேக்காடு முதலியவைகளுக்கு கைகண்ட மருந்து.

3. சாயம் தயாரிக்கும் தொழிலிலும். காலிகோ பிரின்டிங் தொழிலிலும் இது உபயோகப்படுகிறது.

தற்காப்பு விதிகள்

'பொட்டாசியம் குளோரேட்டை உபயோகிப்பவர்கள் அனுசரிக்க வேண்டிய விதிகளைப்பற்றி இங்கு சிறிது கூறுவது அவசியம். பொட்டாசியம் குளோரேட் ஒரு ஆபத்தான பொருள். மரம், கரி அல்லது வேறு சில பொருள்களுடன் கலந்திருக்கும்போது சிறிதளவு அதிர்ச்சி இருந்தாலும் வெடித்துவிடும். அஜாக்கிரதையினுல் விதிகளைப் புறக்கணித்ததால் ஏற்பட்டிருக்கும் விபத்துக்கள் பல. ஆகையால் இதைக் கையாளும்போது மிக மிக எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

துணிகளின்மேல் விழுந்துவிட்டால் உடனே அவைகளைத் தண்ணீரில் நன்ருக அலசிவிட வேண்டும். பொடி பண்ணும் இடமும் அல்லது வேறு ரசாயனப் பொருளுடன் கலக்கும் இடமும்,மற்ற கட்டடங்களுக்கு அருகே இல்லாமல் ஒரு தனியிடத்தில் இருக்கவேண்டும். கட்டடத்தில் மரச் சாமான்கள் இருக்கக்கூடாது. ஜன்னல்கள், கதவுகள் எல்லாம் வெளியே திறக்கும்படியாக இருக்க வேண்டும். சிமெண்டு தரையே மிகவும் சிலாக்கியமானது. பொடி பண்ணும்போது துகள்கள் வெளியேருவண்ணம் பார்த்துக்கொள்வது அவசியம். கையாளும்போது கூடியவரையில் அதிர்ச்சியில்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். நெருப்புப் பொறிகள் அதன் அருகிலேயே வரக்கூடாது. இதில் சிறிது அஜாக்கிரதையாக இருந்தாலும் பெரியவிபத்துக்கள் ஏற்படும்.குளோரேட்டு உப்பு வைத்திருக்கும் இடத்தில் மற்ற பொருள்கள் எதுவும் வைக்கக்கூடாது. குளோரேட்டு வைத்திருக்கும் டிரம்களை நன்ருக மூடி வைக்கவேண்டும். ஒன்றின் மேலொன்ருக அடுக்கி வைக்கக்கூடாது.

மேற்கூறியவற்றை கவனிக்காமல் அசட்டையாக இருந்தால் தமக்கு மட்டுமின்றி மற்றவர்களுக்கும் ஆபத்து என்பதையும், அஜாக்கிரதையினுல் ஏற்பட்டிருக்கும் விபத்துக்கள் அநேகம் என்பதையும் பொட்டாசியம் குளோரேட்டைக் கையாளும் ஒவ்வொருவரும் எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

# ஒரு சீனக் கதை

மொழிபெயர்ப்பு-- எல். ஸி. ரிச்சர்டு

பண்டைகாலத்து வீரன் ஒருவனின் உருவச்சிலை உண்டாக்க ஒரு சிற்பிக்கு கட்டளையிடப் பெற்றது. பணியைப் பெற்றதும் வீரன் எப்படியிருப்பான் என்று தெரிந்து கொள்ள அவனைப் பற்றிய சரித்திரங்களை வாசிக்க ஆரம்பித்தான் சிற்பி. தான் உண்டாக்கும் வீரனின் சிலை அசல் போல இருக்க வேண்டும் என்ற ஆசை அவனுக்கு இருந்தது.

ஒரு மனத்துடன் இருப்பவர்களுக்கு வெற்றிகிட்டும். வீரனின் தோற்றம், உடை, உடலமைப்பு, முகம் இவை யெல்லாம் சிற்பியின் மனக்கண் முன்பு அசையாமல் நின்றன. இப்படி உருவம் தெளிவாய் இருந்தால்தானே உருவம் மெய் போல தோற்றம் அளிக்கும் !

அதிகப்படியாக மலைக்குச் சென்று தகுந்த பாறை ஒன்றைத் தேர்ந்தெடுத்தான். செதுக்குளி கொண்டு வேலையைத் தொடங்கினான். தரிக்க வேண்டியதைத் தரித்தும் தங்கவேண்டியதை நிறுத்தியும் உளி வேலை செய்தது. கற்பனையாக இருந்த உருவம் நிழல் போல உதித்து கடைசியில் வீரன் வடிவாயிற்று. ஓர் அணு கூட மாற்றமில்லாமல் மனத்திலிருந்த வீரன் மெய்யான காட்சியளித்தான். அவன் சிரசு சீராய் நின்று கண்கள் வெகு தொலைவிலுள்ள ஏதோ ஒன்றை உற்று நோக்கு வது போல் இருந்தன. உதடுகள் சிறிது திறந்திருந்தன.

ஏதோ சொல்லுவதுபோல், இடது கரம் ஏழை மக்களை அணைத்துப் பராமரிப்பதுபோல் முன் நீண்டிருந்தது. வலது கரம் ஓங்கி நின்று விரல்கள் மூடி, கை எதிரியைத் தாக்குவதுபோல் தோன்றியது. முறுக்கி விட்ட தசைகளும், நரம்புகளும் பார்ப்பதற்கு வீரனின் உடல் வலிமையை எடுத்துக்காட்டின. சிற்பிக்குச் சந்தோஷம் அளவுகடந்தது. தான் எண்ணியவாறே வீரனின் உருவச்சிலையை செய்து முடித்தானல்லவா ?

நகரத்தின் மத்தியில் ஒரு மைதானம். அந்தப் பொதுவெளியின் நடுவில் இந்தச் சிலையை நிறுத்த மக்கள் விரும்பினார்கள். சிலை செய்யும் பொழுது கொத்தி எடுக்கப்பட்ட கற்துண்டுகளை வைத்தே ஒரு பீடம்செய்து அதன்மேல் வீரனின் சிலையை நிறுத்தினார்கள். பீடம் மிக உயரமாக இருந்தபடியால் நகருக்குள் நுழைவதற்கு முன்பே வீரனின் சிலை தோற்றம் அளித்தது.

இந்தப் பெருமையை கொண்டாடினார்கள் நகரப் பெருமக்கள். திராட்சை ரசத்தை நன்றாக குடித்தார்கள். ஒருவரையொருவர் கீழே தள்ளிக் கொண்டார்கள். ஆனந்தக் கடலில் மூழ்கினார்கள். சிலருக்கு மண்டையிலும், காலிலும் காயம். ஆடினார்கள், பாடினார்கள். அன்று முதல் வீரனை ஒரு நாளும் மறக்கவில்லை. வாழ்க்கையிலேயே அவர்களுக்கு புத்துணர்ச்சி அளித்தது அந்த வீரனின் ஞாபகம். சிலையைக் கடந்து செல்லும் பொழுதெல்லாம் நகரமக்கள் நின்று தலை குனிந்து வணக்கம் செய்தனர்.

தற்பெருமை கொள்வது சகஜம்தானே? உருவம் செய்த கருங்கல்லுக்கு, இவ்வளவு மரியாதை தனக்குக் காட்டியது மயக்கத்தைக் கொடுத்து விட்டது. "என்னைப் பார்! என்னைவிட உயர்ந்த மனிதன் இல்லை. எல்லோரும்

என்னை வணங்குகிறார்கள். கண் கண்ட தெய்வம் நானே. என்னைவிட இவர்கள் கும்பிடும் தேவர்களுக்கு மதிப்பு இல்லை" என்று சிலை சொற்பொழிவு ஆற்றியது. இது ஆகாயத்தில் உல்லாச நடையில் சென்ற வெண் மேகங்களைப் பார்த்தல்ல. மேகங்களுக்கு இரத்த ஓட்டமில்லை; இருதயமுமில்லை. வனக்காட்டைப் பார்த்து மல்ல; அங்கே மரங்கள் தங்களுக்குள்ளே முணுமுணுத்துக் கொண்டிருந்தன. இதைக் கவனிக்க அவற்றுக்கு நேரமில்லை. இந்தச் சொற்பொழிவு சிலையின் கால்களுக்கடியில் அடுக்கப்பட்டிருந்த கற்துண்டுகளைப் பார்த்து ஆற்றப் பெற்றது. தன் கூட்டாளிகள் முன்பு தானே தற்பெருமை கொள்ளமுடியும்! அதன் பின்னர் தன் தலையைத் தூக்கிக் கொண்டு கண்களை அடிவானத்தை நோக்கி செலுத்தியது, சிலை. ஒரு கணங்கூட இனி கீழ் நோக்குவதில்லை என்ற தீர்மானம் அதன் முகத்தில் தோன்றிற்று. தற்பெருமையின் தவறுக்குறி இது அல்லவா? "பொடிப்பயல்களா! என் காலடியில் கிடக்கும் பொடிப்பயல்களா!" என்று சொல்லுவது போல் அது இருந்தது.

"ஓய், என்ன ஓய், உன் தலை சுழலுகின்றதா? முன்பு என்ன கதியில் இருந்தாய் என்று மறந்து விட்டாயா?" என்று மெல்லிய குரலில் ஒரு சிறிய கற்துண்டு கேட்டது.

"இதற்கு முன் நீ எங்களில் ஒருவனாக இருந்தாய். மறந்து விட்டாயா? ஒரே தாய் மலையாக நாமிருந்தோமல்லவா?" என்றது மற்றொரு சிறுகல்.

"சரிதான், அது அப்பொழுது சிற்பியின் கை பட்டதும் நான் புறத்தானாய் மாறி விட்டேன். நீங்கள் வேறாய் துண்டிக்கப்பட்டீர்கள். என்னைத் தனியே

உருவாக்கி, நகரமக்கள் வணங்கும் தெய்வமாக சிருஷ்டித்தான் சிற்பி. எனக்கு இந்த உன்னத ஸ்தானம் கிடைத்தது நியாயம் தானே. நீங்களெல்லோரும் என் காலடியில் குவிக்கப்பட்டது உங்களுக்குத் தகுதியான இடம். உதவாக்கரைகள்! கழிக்கப்பட்ட நீங்கள் எனக்கு சமமாக முடியுமா? அப்படியானால் வானமும் பூமியும் ஒரு மட்டம் என்றுதான் கொள்ளவேண்டும்" என்று சிலை கூறிற்று.

மற்றொரு சிறிய கல் "கெக் கெக் கெக்கே" என்று சிரித்தது. "எதற்காக கொக்கரிக்கிறாய், துக்கடா?" என்று சிலை கேட்டது. "நடந்ததை மாத்திரம் நீ மறக்கவில்லை. இப்பொழுதைய நிலைமையும் கூட மறந்து விட்டாயே!" என்றது சிறுகல்.

"இப்பொழுது நிலைதான் என்ன?" என்றது சிலை.

"நாங்கள் துண்டிக்கப்பட்டு தனியாக்கப்பட்டோம் என்று நினைக்காதே. நாம் ஒன்றுக்கப்பட்ட உருவம் தான் இன்னமும், கவனித்துப் பார்! உன் சிகரத்தின் உச்சியிலிருந்து நாங்களிருக்கும் இடம்வரை ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கிறோம். அது மாத்திரமா? இப்பொழுது இருக்கும் மாறிய நிலை உனக்கு ஆபத்தானது. எங்கள் மேல் தான் நின்று கொண்டிருக்கிறாய். நாங்கள் நினைத்தால் உன்னை அசைத்துவிடுவோம்......"

"ஹுக்கும், உலகத்தில் நீங்கள் மாத்திரம் தானா இருக்கிறீர்கள். என்னைத் தாங்கிக் கொள்ள!" என்றது சிலை.

"வேறே கற்துண்டுகளை நினைத்துக் கொண்டிருக்காதீர்கள். கீழே விழுந்து விட்டீர்களென்றால் அதுதான் உங்கள் முடிவு. சுக்குநூறாக நொறுங்கி விடுவீர்கள்.

அப்பொழுது நீங்கள் காட்டும் பேதங்களும் ஒழியும்'' என்றது சிறு கல்.

இதைக் கேட்டதும் உருவச் சிலைக்கு கோபம் பொங்கிற்று. கொலைகாரப் பாவிகளையும், அடிமைகளையும் பார்த்துப் பேசுவது போல் உரத்த சத்தமிட்டு "மரியாதை தெரியாத அசடே, பொய்யும் புரட்டும் பேசி மக்களை ஏமாற்றப் பார்க்கிறாயா? நிறுத்து உன்பேச்சை'' என்று கூறிற்று சிலை.

"அப்படியானால் எங்களை நம்பவில்லையா? இதோ காட்டுகிறோம் என்று எல்லா கற்துண்டுகளும் இப்பொழுதே அசக்கி விழுத்தாட்டுங்கள்'' என்று சப்தமிட்டன.

தன் பெருமையை மறந்தது சிலை. கோபம் பறந்து விட்டது. அழுகிற குரலில் "அன்பர்களே, தோழர்களே நாம் நண்பர்களல்லவா? ஏன் இப்படி என்னோடு சண்டை செய்கிறீர்கள். நீங்கள் சொல்லுவதையெல்லாம் ஒப்புக் கொள்கிறேன். என்னை மாத்திரம் கீழே தள்ளி விடாதீர்கள்'' என்று கேட்டுக் கொண்டது சிலை.

நாங்கள் சொல்லுவதை நம்புகிறாயா?'' என்று சிரிப்புடன் கேட்டன கற்றுண்டுகள்.

"உண்மையாகவே நம்புகிறேன்'' என்றது உருவச் சிலை.

தாற்காலிகமாக வந்த ஆபத்து தொலைந்தது என்று உருவச்சிலை நினைத்துக் கொண்டது. சில நாட்கள் சென்றன. தன் உன்னத நிலை தன்னை அடிமையாக்கி விட்டதல்லவா? ஆகவே ஒரு நாள் வீரனின் உருவச் சிலை கற்துண்டுகளைப் பார்த்து "என்ன இருந்தாலும்

நான் உங்களைவிட உயர்ந்தவன், பாருங்கள். நான் ஒரு வீரனின் சிலை. சரித்திரத்திலேயே பெயர் பெற்ற வீரனின் சிலை. ஆம், வீரனின் அசல் உருவச்சிலை" என்றது.

"ஹுக்கும், சரித்திரம் உண்மையா, ஆயிரம் வருஷங்களுக்கு முன் வசித்தவர்களைப் பற்றி கண் கொண்டு பார்த்ததுபோல் எழுத முடியுமா? சரித்திரத்தை எப்படி நம்புவது?" என்று ஒரு சிறு கல் பேசியது.

"சரித்திரத்தில் உள்ள பக்காத்திருடர்களைக் கூட சரித்திரம் எழுதுபவர்கள் வீரர்களாக்கி விட்டார்கள். தப்பு என்று அடித்துக் காட்ட நேரில் பார்த்தவர் யாரும் யில்லையே? அது மாத்திரமா, கற்பனை உலகிலிருந்து வீரர்களை உருவாக்கி நமக்கு தந்து விட்டால் சரித்திர வீரனுக்கும் கற்பனை வீரனுக்கும் வித்தியாசம் தெரியாமலே போய்விடுகிறது." என்றது மற்றொரு சிறு கல்.

"அப்படியானால் நான் கற்பனை வீரனா? என்னை ஏன் இவ்வளவு மரியாதைக்கு ஆளாக்கியிருக்கிறார்கள்? உண்மையாக சரித்திரத்திலுள்ள உண்மை வீரன் நானே" என்றது சிலை.

"நிச்சயமாக சொல்ல இடமில்லை" என்றன ஆறு, ஏழு கற்கள் ஒன்றாக.

"மக்கள் வெகு சீக்கிரம் ஏமாற்றம் அடைந்து விடுகிறார்கள். இல்லையேல் போலி வீரர்களை இப்படி மதிப்பார்களா?" என்றது ஒரு சிறு கல்.

உருவச்சிலைக்கு பீதி உண்டாயிற்று "நான் ஒரு போலியா? சிற்பி என்னை ஏமாற்றி விட்டான்! என்னை ஏளனம் செய்யவே இப்படி உயர்த்தி நிறுத்தி விட்டான்! படுபாவி!" என்று ஒப்பாரி வைத்தது.

அடியில் குவிக்கப்பட்ட கற்கள்கூட அதைக் கேட்டு "நாம் கூட ஏமாந்து விட்டோமே! ஒரு போலி வீரன் காலடியில் வாழ்நாட்கள் எல்லாம் கிடப்பதா? அர்த்தம் இல்லையே!" என்றன.

கற்கள் ஒன்றும் அதற்கு மேல் பேசிக் கொள்ள வில்லை. இருள் வந்து மூடிவிட்டது. நள்ளிரவு. திடீரென ஒரு சப்தம். உருவச்சிலை தலைகீழாக விழுந்து நொறுங்கியது. அடித்தளமும் ஆடிவிட்டது. எல்லாக் கற்களும் பெரிதும் சிறிதுமாக பண்டை நிலையை அடைந்தன.

மறுநாள் நகர மக்கள் வழக்கம் போல உருவச் சிலைக்கு வணக்கம் செலுத்த நினைத்த பொழுது உருவச் சிலையைக் காணோம். மைதானத்தின் மத்தியில் கற்குவியலைத்தான் கண்டார்கள். ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தார்கள். தங்களுக்குத் தினந்தோறும் உற்சாகம் ஊட்டிய சிலையைக் காணோமே என்று வருந்தினார்கள்.

சிற்பி மைதானத்துக்கு வந்து தன் வேலையின் அழிவைக் கண்டு கண்ணீர்விட்டு அழுதான். இனி உளிகொண்டு கல்லை வெட்டிச் சிலை செய்வதில்லை என்று சபதம் செய்தான்.

மைதானத்தின் மத்தியில் கற்குவியல் பெரும் இடைஞ்சலாக இருந்தது. "ஏன் இந்தக் கற்களைக் கொண்டு வடக்கே செல்லும் பாதையைச் செப்பனிடக் கூடாது?" என்று மக்களில் ஒருவர் கேட்டார். அதை எல்லோரும் ஆமோதிக்கவே, புதிய கற்சாலை ஊருக்கு வடக்கே உருவாயிற்று. வெகு சௌகரியமாக வடக்கே செல்லும் பிரயாணிகள் அந்தச் சாலையை உபயோகித்தார்கள்.

காலை வெயிலில் சாலையிலுள்ள கற்கள் "பளிச் பளிச்" என்று பிரகாசித்தன. சந்தோஷச் செய்தி அனுப்பின. "நாமெல்லோரும் சமம். மக்கள் சேவையில் ஒருவருக் கொருவர் இளைத்தவர்களல்லர். நம்மில் ஒருவரும் போலி இல்லை. எல்லோரும் ஒன்றாக மக்களின் நன்மைக்காக புதிய சாலையில் பணிந்து கிடக்கிறோம். இதை விட மகத்தான சேவை உண்டோ!" என்பதே அச் செய்தி.

# மணிமுத்தாறு

திருநெல்வேலி ஜில்லா மணிமுத்தாறு திட்டம் சுதந்திரத்திற்குப் பின் சென்னை ராஜ்யத்தில் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது பெரிய திட்டமாகும். தாம்பிரபரணி பாசனப் பிரதேசத்தில் உள்ள 83,000 ஏக்கரா ஆயக்கட்டுப் பகுதிக்கு இதன் மூலம் ஸ்திரமான பாசன வசதி கிடைக்கும்; முந்நூறு குளங்கள் மூலம் பாசன வசதிபெற்ற சுமார் 20,000 ஏக்கரா நிலத்துக்கும் இது பக்கபலமாக இருக்கும்.

மணிமுத்தாறு அணை கல்லிடைக்குறிச்சி ரயில் நிலையத்திலிருந்து சுமார் ஐந்து மைல் தூரத்திற்கு அப்பால் இருக்கிறது. அங்கே தாம்பிரபரணியின் உப - நதியான மணிமுத்தாறு 62 சதுர மைல் பிரதேசத்தில் நீர்ப் பிடிப்பு பெறுகிறது. சராசரி வருஷாந்திர நீர்ப் பாய்ச்சல் அளவு 1100 கோடி கன அடி. இந்தப் பிரதேசத்திலுள்ள நிலச்சுவான்தார்கள், விவசாயிகள் ஆகியோரின் ஆர்வமும், ஊக்கமும்தான் இத்திட்டம் நிறைவேறுவதற்கு மூலகாரணம். பிற இடங்களைப் போல் அல்லாமல் இங்கே மக்கள் தங்கள் நன்கொடைகளைத் தாராளமாக வழங்கி சர்க்கார் இத் திட்டத்தை மேற்கொள்ளும்படி செய்தார்கள். இப்பிரதேச மக்கள் கட்டுமான வேலைக்காக ஒருகோடி ரூபாய் கடனைகத்தந்திருக்கிறார்கள்.

### தாம்பிரபரணி பாசனம்

தாம்பிரபரணி நதி மூலம் பிரதானமாய் ஜல வசதி பெற்றுவந்த இந்த ஜில்லா மக்களுக்கு மணிமுத்தாறு

திட்டமானது நீண்டகால அபிலாஷையைப் பூர்த்தி செய்கிறது. தாம்பிரபரணி நதி மீது அணைகள் இருக்கின்றன. அந்நதி வருஷந்தோறும் சுமார் 83000 ஏக்கரா நிலத்துக்குப் பாசனத் தண்ணீர் வழங்குகிறது. பெரும் பாலான நிலமும் இருபோக நிலமாகும். ஆனால் எப்பொழுதும் போதிய அளவு தண்ணீர் இல்லாமையால் மாசூல் அதிகத் திருப்திகரமாய் இல்லை. கடைசி அணைக் கட்டான ஸ்ரீவைகுண்டம் அணை மீது உபரியாக வழிகிற தண்ணீர்ப்பாய்ச்சலைப் பரிசீலித்ததில் பெரும் வெள்ளம் வரும்போது ஏராளமான தண்ணீர் விணாகிவிடுவதாகத் தெரிகிறது. இந்த உபரித் தண்ணீரில் ஒரு பகுதியைத் தேக்கவைத்து மின்சார உற்பத்திக்கு உபயோகிப்பதற்காக, பாபநாச தேக்கம் அமைக்கப் பெற்றது. அதுகூட ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டில் விணாக வழிய நேருகிற உபரித் தண்ணீர் முழுவதையும் உபயோகப்படுத்திக் கொள்ளவில்லை. அதே சமயத்தில் தண்ணீர் தட்டுப் பாட்டுக் காலங்களில் உள்ள கஷ்டமும் இருந்து வந்தது. எனவே, தாம்பிரபரணி நீர்ப்பிடிப்புப் பகுதியில் மற்றொரு தேக்கத்தை அமைத்து உபரித் தண்ணீரைச் சேமித்துப் பற்றாக்குறைக் காலத்தில் பயன் படுத்துவதுதான் சரியான வழியென்று தீர்மானிக்கப்பெற்றது. அதன் படிதான் தாம்பிரபரணியின் மிக பெரிய உப-நதியான மணிமுத்தாறுமீது அணைகட்டும் ஏற்பாடு ஆலோசனைக்கு வந்தது.

மணிமுத்தாறு மேற்குத் தொடர்ச்சி மலையின் கடைக் கோடி ஸ்தலத்தில் கன்னியாகுமரியிலிருந்து சுமார் ஐம்பது மைல் வடக்கே உள்ள காட்டில் உற்பத்தியாகிறது. மலை வழியாக சுமார் ஆறு மைல் தூரம் பல அருவிகளாக விழுந்து அது கல்லிடைக்குறிச்சிக்கு மேற்கே சுமார் இரண்டு மைல் தூரத்தில் தாம்பிரபரணி

நதியுடன் சேருகிறது. மணிமுத்தாறு அணை மூலம் சுமார் 3000 ஏக்கரா நிலத்துக்குப் பாசன வசதி கிடைக்கிறது. இரண்டு அணைகள் உள்ளன. ஒன்று பெருங்கல் அணை; மற்றொன்று கொதிக்கல் அணை.

1945 ஆம் ஆண்டு முதலே மணிமுத்தாறு தேக்கம் பற்றிய பல யோசனைகள் பரிசீலிக்கப்பெற்றன. 1950-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் மணிமுத்தாறு திட்டத்துக்கு அங்கீகாரம் அளிக்கப்பெற்றது.

### இடம் தெரிந்தெடுப்பு

அணைக்கான இடத்தை இறுதியாகத் தெரிந்தெடுப்பது பெரிய பிரச்னையாகிவிட்டது. இரண்டு மாற்று ஸ்தலங்கள் குறிப்பிடப் பெற்றன. அவற்றில் ஒன்றை ஆதாரமாக வைத்துச் செலவுமதிப்புக் கணக்குகள் நிர்ணயிக்கப்பெற்றன. இரண்டு ஸ்தலங்களையும் கவனித்துப் பரிசீலனை செய்யவேண்டியிருந்தது. ஏழு குன்றுகளோடு தொடர்பாய் இருந்த கீழ் ஸ்தானம் இறுதியாகத் தெரிந்தெடுக்கப்பெற்றது. ஆனால், அந்தப் பாறைகள் உடைத்து எறியப்பட்டபோது குன்றுகளில் அனேக இடங்களில் பாறையில்லாமல் வெறும் மண் இருப்பது தெரியவந்தது. அது தண்ணீர் ஊருத கெட்டிப்புவேலை செய்யவேண்டியதாகிவிட்டது. கட்டுமான அணைப்பகுதியில் பாறை விடர் உள்ளதாகப் பிளவுப்பட்டு இருந்தது. அதனால் நினைத்ததைவிட அதிக ஆழத்துக்குத் தோண்டி ஸ்திரமான அஸ்திவாரம் ஏற்படுத்த நேரிட்டது.

### மணிமுத்தாறு அணை

இத்திட்டத்தில் 550 கோடி கன அடி தண்ணீரைத் தேக்குகிற தேக்கமும், 28 மைல் நீள பிரதான கால்வாயும்

இருக்கும். அணையின் நீளம் 9600 அடி. அதில் கட்டு மானப் பகுதி 1230 அடி. படுக்கைக்கு மேலே அதன் உயரம் 138 அடி. ஆற்றுப் பகுதியில் தண்ணீர் மறிந்து பாய்கிற நடுப் பகுதியின் நீளம் 334 அடி. அதில் ஏழு மேல் மட்ட பகுதிகள் இருக்கும். அவை 40 அடி அகலமும் 15 அடி உயரமும் உள்ளவை. விநாடிக்கு உச்சபட்சம் 60,000 கன அடி தண்ணீரை பாயவிடுகிற சக்தியுள்ளவை. கட்டுமான அணையின் மீதிப் பகுதியில் நான்கு மதகுகள் இருக்கும். அவை மூலம், பாசனத்துக்குத் தண்ணீர் பாயும். கட்டுமான அணைக்குப் பக்கத்தில் மண் அணைகள் இருக்கும். மண் அணையின் உச்ச உயரம் பூமி மட்டத் துக்கு மேலே 115 அடி.

அணையோடு ஒட்டினாற்போல் உள்ள ஏழு குன்று களும் அணையோடு தக்க முறையில் இணைக்கப்பெற்றுள் ளன. இரு குன்றுகளுக்கு நடுவிலுள்ள தொண்டு மண் அணையால் நிரப்பப்பட்டிருக்கும். தண்ணீர் தாக்கும் பக்கத்திலுள்ள குன்றுப் பகுதிகள் சரிசெய்யப் பட்டு தண்ணீர் ஊருதபடி கெட்டிசெய்யப்பட்டிருக்கிறது.

யந்திர உபயோகத்தால் துரித வேலை

இந்த அணைக்குப் பதினைந்து கோடி கன அடி மண் வேலை செய்யவேண்டியிருந்தது. கீழ் பவானி அணைக்குச் செய்யப்பெற்ற அளவை அனேகமாய் இது அனுசரித் திருந்தது. வேலை முழுவதும் யந்திர சாதன உதவியுடன் செய்யப்பட்டதால் நடவடிக்கை துரிதமாக நடந்தது. உச்சபட்சமாய் மாதமொன்றுக்கு 50 லட்சம் கன அடி மண் வேலை நடந்தது. 1955—56-ல் தினசரி சராசரி மூன்று லட்சம் கன அடியாக இருந்தது. 11 ஸ்கிராப்பர் யந்திரங்கள், 8 ஷோவல் யந்திரங்கள், 12 டம்பர் யந்தி ரங்கள், 16 டிராக்டர்கள், 10 ரோலர்கள், 2 கிரேடர்கள்

முதலியவை உபயோகிக்கப்பெற்றன. கல்கட்டு வேலை தொழிலாளர்களால் செய்யப்பெற்றது. சுமார் ஒருகோடி கன அடி கட்டுமான வேலை நடந்திருக்கிறது. உச்ச பட்சமாய் மாதமொன்றுக்கு ஐந்து லட்சம் கன அடி வேலை நடந்தது. உச்சபட்சம் ஒரு தினத்தில் நடந்த வேலை 35,000 கன அடி; சுமார் ஐயாயிரம் தொழிலாளர்கள் வேலை செய்தார்கள்.

திட்ட நன்மைகள்

ஐந்துகோடி ரூபாய் செலவில் கட்டப் பெற்றுள்ள மணிமுத்தாறு தேக்கமும், கால்வாய்களும் இப்போது தாம்பிரபரணி பாசன ஏற்பாடு மூலம் தண்ணீர் வசதி பெறுகிற 83,000 ஏக்கரா ஆயக்கட்டுக்கு நிரந்தரமாகத் தண்ணீர் வழங்கும்; அம்பாசமுத்திரம், நாங்குனேரி, திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர் தாலுக்காக்களிலுள்ள சுமார் 320 குளங்களின் மானாவாரி தண்ணீருக்கு அதிகப்படி தண்ணீரும் அளிக்கும். ஆற்றின் மதகுகள் மூலம் தாம்பிரபரணியிலுள்ள கீழ்ப் பகுதி அணைக்கட்டுகளுக்குத் தண்ணீர் கிடைக்கும். அணையின் வலதுபுறம் உள்ள உயர் மட்ட வாய்க்கால் தான் பிரதான வாய்க்கால்; அது சுமார் இருபதாயிரம் ஏக்கரா ஆயக்கட்டு உள்ள மானாவாரி குளங்களுக்குத் தண்ணீர்ப் பாய்ச்சும். இப்புதிய திட்டத்தின் மூலம் அதிகப்படியாய் இருபதாயிரம் டன் அரிசி கிடைக்குமென்று எதிர்பார்க்கப்பெறுகிறது. அதிர்ஷ்டவசமாய் இத்திட்டத்துக்கான நீர்ப்பிடிப்புப் பிரதேசம் பெரும்பாலும் சிங்கம்பட்டி காட்டில் இருப்பதால் மக்களை இடம் பெயர்த்து புனர்வாழ்வளிக்கும் பிரச்னையோ, நஞ்சை நிலம் தண்ணீரில் அமிழும் பிரச்னையோ ஏற்படவில்லை.

# கொய்த மலர்கள்

---

பிரார்த்தனை

தாயே யெனைத்தான் தந்தவனே
தலைவா ஞான சபாபதியே
பேயேன் செய்த பெருங்குற்றம்
பொறுத்தாட் கொண்ட பெரியோனே
நீயே யிந்நாள் முகமறியார்
நிலையி லிருந்தால் நீடுலகில்
நாயே யனையே னெவர் துணை என்(று)
எங்கே புகுவேன் நவிலாயே

—அருட்பா

கர்மமும் துறவும்

எனக்குத் துறவிலே நம்பிக்கை யுண்டு; ஆனால் கர்மத்திலும், கர்மத்தின் மூலமுமே துறவைத் தேட வேண்டும். உடம்போடு கூடிய உயிருக்குக் கர்மம் இன்றியமையாத ஒரு நிபந்தனையாகும்.

ஏதோ ஒரு கர்மத்தை ஒருவிநாடியேனும் புரியாமல், ஜீவ சக்கரம் ஓடாது.

ஆதலால், தேகம் கர்மத்தைப் புரிந்து கொண்டே யிருக்கும்போது, ஆத்மா அந்தக் கர்மத்தில் ஒட்டாமல் சுதந்திரமாய் இருப்பதுதான் துறவாகும்.

துறவு மார்க்கத்தைப் பின்பற்றுபவன், சகல கர்மங் களையும் கைவிட்டு விடுவதில்லை; கர்மத்திலேயே சிறிதும்

பற்றில்லாமலும், தூய பரோபகார எண்ணத்தோடும், கர்மம் புரிவதாலேயே துறவு நிலையை அடைகிறான்.

—காந்தியடிகள்

தெய்வத் தாய்

குழந்தைகள், தனித்து மரப்பாவைகளை வைத்துக் கொண்டு மனம்போனபடி யெல்லாம் விளையாடும் பொழுது, தாயை நினைப்பதில்லை. ஆனால் அவ்விடத்திற்குத் தாய் வந்து விட்டால் குழந்தைகள் மரப்பாவைகளை அப்பால் போட்டுவிட்டு, "அம்மா அம்மா" என்று கூவிக் கொண்டே அவளிடம் ஓடும்.

அக் குழந்தைகளைப் போலத்தான் நீங்களும் இவ் உலகத்தில் செல்வம், மதிப்பு, புகழ் முதலிய மரப்பாவைகளில் கருத்தூன்றியவர்களாய் வேறு ஒன்றையும் கவனிக்காமல் விளையாடிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் ஒரு தரம் உங்களுக்குள்ளே இருக்கும் திவ்விய மாதாவை நீங்கள் காண்பீர்களானால், செல்வம், மதிப்பு, புகழ் முதலியவற்றில் அப்பால் உங்களுக்கு ஒருபோதும் இச்சை உண்டாகாது. அவற்றை யெல்லாம் தூர எறிந்து விட்டு, நீங்கள் அவளை நாடி ஓடுவீர்கள்.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்

பிறர் செய்யும் வேலை

பிறன் ஒவ்வொருவனுடைய வேலையும் எப்பொழுதும் நமக்கு நம்முடைய வேலையைவிடச் சுலபமாகத் தோன்றுவது ஒரு விநோதம். பிறன் தன் வேலையை எவ்வளவுக் கெவ்வளவு சிறப்பாகச் செய்கின்றானோ, அவ்வளவுக் கவ்வளவு அதி சுலபமாக அது நமக்குத் தோன்றுகிறது!

—ஆங்கில ஆசிரியர் ஏடன் பில்பாட்ஸ்

மீனும் மனிதனும்

"எஜமானே ! மீன்கள் நீரிலே எப்படி வாழ்கின்றன என்று எனக்கு ஆச்சரியமா யிருக்கிறது."

"ஆச்சரிய மென்ன ? தரையிலே மனிதன் வாழ்வதைப் போலவேதான் ; பெரியவை சிறியவற்றை விழுங்கி வாழ்கின்றன."

—ஷேக்ஸ்பியர்

இரண்டு வழிகள்

புத்திசாலித்தனமாய் நடந்து கொள்ள இரண்டு விதிகள் அவசியம். ஒன்று, செயலில் இறங்கு முன் சிந்தனை; மற்றது செயலில் இறங்கிய பின் தன்னடக்கம்.

—ஸெய்ன்ட் இக்னேஷஸ் லோயலா

பயம்

நாம் சோம்பி உட்கார்ந்திருக்கும் போதுதான் பயங்கள் உண்டாகின்றன. பயம் என்பது உள்ளத்திலே தோன்றினால், "ஏதாவது வேலை செய்" என்று இயற்கை செய்யும் எச்சரிக்கையாகவே அதை நாம் கருதவேண்டும்.

—டாக்டர் ஹென்ரி ஸி. லிங்க்

மன நிலை

நான் எங்கே போனால் என்ன? எங்கிருந்தால் என்ன? என் உள்ளத்திலிருக்கும் தெய்வம் என்னை விட்டு நீங்காது. அந்தத் துணையைக் கொண்டு, என் தருமத்தின்படி நான் நடந்து கொண்டேனானால், என் உள்ளத்தில் சாந்தி உண்டாகும். இவ்வாறிருக்க, ஏதேனும் ஒரு விபத்து நேர்ந்தவுடனே உள்ளம் கலங்கி, இயற்கை மாறி, நடுநடுங்கி, அலைந்து, பயந்து, ஏங்கிக் கையை நீட்டுவது தகைமையாகுமா ? மன நிலையைக் காப்பதற்குமேல் எந்தப் பொருள் உளது.

—ஞானி மார்க்கஸ் ஔரேலியஸ்

கபீரின் பொன்மொழிகள்

அன்பு வழி குறுகலான பாதை; அதில் இருவர் போக இயலாது; பரம்பொருளை உணர்ந்தபொழுது நான் அதனுடன் ஒன்றுபடுகிறேன்.

அன்புச் சுவையைப் பருக விரும்பினல் " நான் " என்ற உணர்ச்சியைத் துறக்க வேண்டும். ஒரே உறையில் இரண்டு வாள் இருக்க முடியாது.

பரம்பொருளின் பேரொளியைக் காணச் சென்றேன்; பேரொளியில் நானும் கலந்தேன்; எங்கு நோக்கினுலும் பேரொளியே காட்சி தந்தது.

சொல்லுவது சர்க்கரை போன்று இனிது; செய்வது நஞ்சு போன்று கடினம்;சொல்லுக் கேற்பச் செயலுமிருந்தால் நஞ்சு அமுதமாகும்.

கல்யாணம்

எப்பாடு பட்டாவது கல்யாணம் செய்துகொள். நல்ல மனைவியாய்க் கிடைத்தால் நீ இன்பமடைவாய். கெட்ட மனைவியாய்க் கிடைத்தால் ஒரு வேதாந்தியாகி விடுவாய். வேதாந்தி யாவதோ எந்த மனிதனுக்கும் நல்லதேயாகும்.

—சோக்ரதர்

பக்தன்

வக்கீலைக் காணும்பொழுது வழக்குகளும் நியாயஸ்தலங்களுமே ஞாபகத்துக்கு வரும்.

அது போல, பக்தனைக் காணும்போது, ஈசுவரனையும் மறுமையையும் பற்றிய ஞாபகம் வரும்.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்

சன் யாட் சென்

சீனக் குடியரசின் பிதா என்று சொல்லப்படும் சன்யாட் சென் சீனுவின் அரசியல் தத்துவத்தைப் பின் வருமாறு சுருக்கிக் கூறியுள்ளார்.

1. பொருள்களின் இயற்கையை ஆராய்ச்சி செய்.
2. அறிவின் எல்லேயை விசால மாக்கு.
3. உனது நோக்கத்தில் சிரத்தை காட்டு.
4. மனத்தை ஒழுங்கு படுத்து.
5. தன் மதிப்பை விருத்தி செய்து கொள்.
6. குடும்பத்தை ஆட்சி செய்.
7. ராஜாங்கத்தை நிர்வாகம் பண்ணு.
8. உலகத்தைச் சமாதானப் படுத்து.

யோக்கியதையின் அளவு

தான் செய்வதை யாரும் கண்டு பிடிக்க முடியாது என்று தனக்கு நிச்சயமாய்த் தெரியும்போது, ஒரு மனிதன் என்ன செய்வானே அதுவே அவனது உண்மையான யோக்கியதையின் அளவாகும்.

—ஆங்கில சரித்திர ஆசிரியர் மெக்காலே

நம்பிக்கை

சில மனிதர்களிடம் நீங்கள் எதைச் சொன்னுலும் நம்பிவிடுவார்கள்—ஆனுல் காதோடு சொல்லவேண்டும்.

—ஓர் அமெரிக்கப் பத்திரிகை

லட்சியங்கள்

லட்சியங்கள் நட்சத்திரங்களைப் போன்றவை ; அவற்றை நாம் ஒரு போதும் அடைய முடியாது. ஆனுல் கடலில் செல்லும் மாலுமிகளைப் போல அவற்றைக் கொண்டு நாம் நமது வழியை வகுத்துக் கொள்ளலாம்.

—கார்ல் ஷர்ஸ்

சகோதரிகள் சண்டை

நானும் எனது தங்கையும் சண்டை யிட்டோமானுல் என் தாய் எங்கள் இருவரையும் பிடித்து எதிரெதிரே இரு நாற்காலிகளில் உட்கார்த்தி வைப்பாள்.

"ஒருவர் கண்ணை ஒருவர் பார்த்துக் கொண்டே இருக்கவேண்டும். சிரிக்கவே கூடாது" என்று எங்களுக்குக் கட்டளை யிடுவாள்.

வெகு சீக்கிரத்தில் எங்களுக்குச் சிரிப்பு வந்துவிடும்; சண்டையும் பறந்து போகும்.

—ஓர் ஆங்கில ஆசிரியை

வயிறும் மனமும்

வயிற்றைப் போன்றுதான் மனமும். அதிலே நீ எவ்வளவைத் திணிக்கிருய் என்பது முக்கியமல்ல; அது எவ்வளவு ஜீரணித்துக் கொள்கிறது என்பதுதான் முக்கியம்.

—ஆல்பெர்ட் ஜே

மூவரில் யார் பெரியவர் ?

1917-ஆம் ஆண்டில் ஜெர்மனியை ஆண்ட கெய்ஸரின் கீர்த்தி நிகரற்றது போல விளங்கிற்று. லெனின், பிரம்மாண்டமான ருஷ்யப் புரட்சியை நடத்திச் சென்ற காட்சி, அபூர்வமான காட்சி. அதே சமயத்தில் லோகமான்ய பாலகங்காதர திலகர், இந்தியாவில் சுயாட்சிச் சங்கங்களை நிறுவ ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்.

"இந்த மூவரில் யார் பெரியவர் ?" என்று இளம் பிராயத்தினரான எங்களில் சிலர், யோகி அரவிந்தரைக் கேட்டோம். அரவிந்தர் ஒரு விநாடிகூட யோசிக்கவில்லை. "லோகமான்ய திலகர்தான் உயர்ந்தவர்" என்று வாய் நிறையச் சொன்னுர்.

“ அவர் இந்தியர், இந்திய சுயராஜ்யத்துக்காக உங்களோடு சேர்ந்து உழைத்தவர் என்ற காரணத்துக்காக, திலகர் பெரியவர் என்று நீங்கள் சொல்லுகிறீர்களா ?” என்று நாங்கள் கேட்டோம். அவர் சிரித்தார்.

“ ஒரு பொருளை மதிப்பிடுவதற்கு ஒரு திட்டம் ஒரு முறை உண்டு. ஒரு திட்டத்தை எப்படிக் கோலமுடியும்? இலட்சியத்தைக் கருதித்தான், முறையை வகுக்க முடியும்; திட்டத்தைக் கோல முடியும். உயர்ந்தது, தாழ்ந்தது என்று சொல்லுவதெல்லாம். பெரும்பாலும் இலட்சியத்தையே பொறுத்திருக்கிறது” என்று அரவிந்தர் சொன்னார்.

“ சரி: அப்படியானல், எந்த இலட்சியத்தைக் கொண்டு, திலகர் பெரியவர் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள் ?” என்று கேட்டோம்.

“ஏற்கெனவே, ஜெர்மனியில், இருந்த யுத்த இயந்திரத்தைப் பக்குவப்படுத்தி வலுப்படுத்தின பெருமை கெய்சரைச் சார்ந்தது. சுதந்திர வீறு கொண்டு எழுந்த மக்களிடையே வேலைசெய்து, திட்டம் அமைத்து புரட்சியை ஒழுங்கெல்லைக்குள் கட்டுப்படுத்தி, விசித்திரமான அரசியல் கட்டத்தை ஆக்கிய பெருமை லெனினைச் சேர்ந்தது. இவை பிரமாதமல்ல.

“சுமார் இரண்டாயிரம் வருஷங்களாக வாழ்க்கையில் பிடித்தமில்லாமல், நடைப் பிணங்களாக வாழ்க்கையைக் கழித்துவந்த இந்தியர்களுக்குப் புத்துயிர் அளித்து, அவர்களைத் தலை நிமிர்ந்து நடக்கும்படியாகச் செய்த அருமையான பெருமை லோகமான்யரைச் சேர்ந்தது.

“உயிரைக் கொடுப்பவன் உயர்ந்தவன். அழகையோ ஒழுங்கையோ, வலிமையையோ கொடுப்பவன் அவ்வளவு உயர்ந்தவன் அல்லன். ஆகவே இந்த இலட்சியத்தைக்

கொண்டு பார்க்கையில், திலகரே மூவருள்ளும் உயர்ந்தவர் என்று நான் மதிக்கிறேன்." என்றார் அரவிந்தர்.

—வ. ரா.

மனம்

மனம், நீக்ரோவின் தலையிலுள்ள சுருட்டை மயிருக்குச் சமானம். இதை இழுத்தும் பிடித்திருக்கும் வரையில் நீளமாய் இருக்கும். ஆனால் பிடிப்பை விட்டதும், பழையபடி அது சுருண்டுவிடுகிறது. அதுபோல, மனம் பலவந்தமாக அடக்கி நிறுத்தப்பட்டிருக்கும் வரையில் நன்றாய் வேலை செய்து நற்பயன் விளைவிக்கும். ஆனால் சற்று ஜாக்கிரதைக் குறைவு ஏற்படுமானால், உடனே அது சன்மார்க்கத்தை விட்டு விலகிவிடும்.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்

கடவுள் பாதுகாப்பு

பாலைவனத்தில் சஞ்சரித்த மகமது நபி நாயகத்திடம் ஒட்டகங்களை இரவில் கடவுள் பாதுகாப்பில் விட்டு விடலாமா வென்று உடன் வந்தவர்கள் கேட்டார்கள். அவற்றைக் கட்டிவைத்துப் பிறகு கடவுள் பாதுகாப்பில் நம்பிக்கை வையுங்கள் என்றார் நபிநாயகம்.

# பழங்காலப் பொம்மைகள்

மொராக்கோ வில்லியம்ஸ்

சமீபத்தில் லண்டனில் நடந்த பொம்மைக் காட்சியில் பல நாட்டுப் பொம்மைகளும் பழங்காலப் பொம்மைகளும் வைத்திருந்தார்கள். இவற்றில் பல பொம்மைகள், ஒரே குடும்பத்தின் பல தலைமுறைக் குழந்தைகள் உபயோகித்தவை என்பது குறிப்பிடத் தக்கது. விளையாட்டு மூலம் கல்வி போதிப்பது பற்றி இப்போது பேசுகிறார்கள். காட்சியிலுள்ள விளையாட்டுச் சாமான்களைக் கவனித்தபோது இந்தக் கருத்து பழமை யானது என்று தோன்றுகிறது.

குழந்தைகள் கையில் கிடைத்த பொருள்களை வைத்துக் கொண்டு விளையாடுகின்றன. ஆதிகாலத்தில் மனிதன் கல்லாலான ஆயுதங்களை உபயோகித்தபோதும் குழந்தைகள் கல்லையும், கட்டையையும் வைத்துக் கொண்டு விளையாடின. விஞ்ஞானம் வளர வளர, விளை யாட்டுப் பொருள்களும் மாறலாயின. சக்கரம், நீராவி விசை, கடிகாரம், விமானம் என்று உபயோகப் பொருள் கள் பெருகின. விளையாட்டுப் பொருள்களின் அமைப் பும் தோற்றமும் மாறின. பழங்காலப் பொம்மைகளும் கட்டிடங்களும், வரலாற்றைக் கூறுவதுபோல, பழங்கால விளையாட்டுப் பொருள்கள், அந்தக் காலக் குழந்தைகளை அறிந்து கொள்ள உதவுகின்றன.

பொம்மைக் காட்சியில் பலநாட்டு விளையாட்டுப் பொருள்களை சேகரித்து வைத்திருந்தார்கள். அவற்றில்

பலவற்றைப் பொருட்காட்சிச் சாலைகள் கொடுத்து உதவின. பல பொம்மைகள், சில குடும்பங்களின் பரம்பரைச் சொத்தாகும். காட்சியிலிருந்த பொம்மைகளில் பழமையானது, ரோம் நகரைச் சேர்ந்த மண் பம்பரமாகும். அது சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பது அறிஞர்கள் கூற்று. பதினாறும் நூற்றாண்டில் உபயோகிக்கப் பெற்ற பந்தடி மட்டை ஒன்றும் காட்சியிலிருந்தது.

இந்தியா, பர்மா, சீனா, ஆப்பிரிக்கா நாடுகளைச் சேர்ந்த சில பொம்மைகளும், அமெரிக்காவிலுள்ள சிவப்பு இந்தியர்கள், மெக்ஸிகோ மக்கள், பஸிபிக்கைச் சேர்ந்த மயோரி மக்கள் - ஆகியவர்கள் செய்த பொம்மைகளும் காட்சியிலிருந்தன. அவை ஆடை அணிச் சிறப்புள்ளவை. சில பொம்மைகள் மண்ணால் செய்தவை. சில பொம்மைகள் மரத்தாலானவை. வைக்கோற் பொம்மைகளும், மெழுகுப் பொம்மைகளும் உண்டு. சில பொம்மைகள் அழகுள்ளவை. வட அமெரிக்காவைச் சேர்ந்த ஹோபி இந்தியப் பொம்மைகள் வண்ணச் சிறப்புடையவை.

இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகளுக்கு அதிகமான பல நாட்டுப் பொம்மைகள், காட்சியில் இருந்தது குறிப்பிடத்தக்கது. வெளிநாட்டு யாத்திரை பிரபலமடையாத அந்தக் காலத்தில் அவை பிரிட்டனுக்கு வந்தன. பல நாடுகளுக்குச் சென்ற பிரிட்டிஷ் மாலுமிகள் ஆங்காங்கு கிடைத்த பொம்மைகளையும் விளையாட்டுப் பொருள்களையும் தங்களுடைய குழந்தைகளுக்காக வாங்கி வந்தவைதான் இவை.

முதல் எலிஸபெத் ராணி ஆட்சி செலுத்திய காலத்து பொம்மை ஒன்று உண்டு. அழகற்ற மரப்

பொம்மை அது. அந்தச் சமயத்தில், குழந்தைகளுக்கு - ஆணுக்கும்—பெண்ணுக்கும்—ஒரு குறிப்பிட்ட வயது வரையில் ஒரே மாதிரி உடையணிவித்ததால், அந்தப் பொம்மைக்கும், அதே முறையில் உடையிருந்தது. விக்டோரியா மகாராணி சிறுபிராயத்தில் விளையாடிய பொம்மை ஒன்றும் காட்சியில் இருந்தது. அந்தக் காலத்தில் சிறுமி விக்டோரியா அரசவைக்கு வருவோரைக் கவனித்து அவர்களைப்போல பொம்மைகளை செய்து தரச் சொல்லி விளையாடுவது வழக்கம் என்று ஒரு கதை உண்டு.

விளையாட்டின் மூலம் கல்வி கற்பிப்பது பற்றி இப்போது அறிஞர்கள் கூறுகிறார்கள். காட்சியிலுள்ள விளையாட்டுப் பொருள்களைப் பார்த்தால் இந்தக் கருத்து புதிதல்ல என்பது தெரியும், சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு குழந்தைகள் விளையாடிய அட்டைகள், படங்கள், தாயக்கட்டான் முதலியவற்றைச் சேகரித்திருக்கிறார்கள். பிறநாட்டு அரசர்கள், பிரமுகர்கள், மிருகங்கள், பறவைகள் முதலியவற்றையும் துதிகீதங்களையும் குழந்தைகளுக்குக் கற்றுத்தர அவற்றை உபயோகித்திருக்கிறார்கள். எழுத்துக்கூட்டி விளையாட அட்டைகளில் பொறித்த எழுத்துக்களும், எண்களையும் எழுத்துக்களையும் போலப் பிஸ்கோத்துகளைச் செய்ய அச்சுக்களும் காட்சியில் இருந்தன. அவற்றைப் பார்க்கும்போது அந்தக் காலத்துக் குழந்தைகள் பொழுதுபோக்குக்காக மட்டும் விளையாடவில்லை; அறிவு வளர்ச்சி பெறவும் விளையாடினார்கள் போலும்-விளையாட்டுடன் கல்வியும் பெற்றார்கள் - வெறும் விளையாட்டுப் பொருளைத் தேர்ந்தெடுக்க, ஒரு குழந்தைக்கு, தனி அறிவு அவசியமாகயிருந்தது போலும்.

# முந்திரி

"வறுத்த முந்திரிப் பருப்பா? அது மிகவும் ருசியாயிருக்குமே, வெறும் காப்பி சாப்பிடுகிறபோது கொஞ்சம் முந்திரிப் பருப்பும் இருந்தால் எவ்வளவு பேஷ்" என்று உங்கள் நண்பர் கூறலாம். ஆனால் இவ்வளவு சுவையான முந்திரிப் பருப்பு இந்தியாவுக்கு வருஷமொன்றுக்குப் பதின்மூன்று கோடி ரூபாய் மதிப்புள்ள அன்னியச் செலாவணியைச் சம்பாதித்துத் தருகிறது என்பது அவருக்குத் தெரியுமோ என்னவோ? அதுவும் பெரும்பாலும் அமெரிக்க டாலராகப் பெற்றுத் தருகிறது. இவ்வாறு நாட்டு வர்த்தகத்துக்கு முக்கியத்துவமுள்ள இந்த மரம் நம்நாட்டுத் தாவரமல்ல என்பது பலருக்குத் தெரியாது. வெளிநாட்டிலிருந்து இங்கு வந்த இந்த மரம் வெளிநாட்டு நாணயத்தைத் தேடித்தருவது வெகு விசேஷமல்லவா?

முந்திரிச் செடி பிரேஸில் நாட்டைச் சேர்ந்ததாகும்; பதினாறும் நூற்றாண்டில் அது இந்தியாவுக்குக் கொண்டு வரப்பெற்றது. இந்தியக் கடற்கரையோரப் பகுதியில் மண்ணரிப்பைத் தடுப்பதற்காகவே பெரும்பாலும் அதனை இந்தியாவுக்குக் கொண்டுவந்தார்கள். அன்னிய மரமானாலும் அது இந்தியப் பூமியில் நன்றாக வேருன்றிவிட்டது. எல்லோருக்கும் மிகப் பிடித்தமான மரமாகவும் ஆகிவிட்டது. அது மட்டரக மண்ணிலும் வளரும் என்பதால் விவசாயிகள் இதை மிகவும் விரும்புகிறார்கள். ஊரில் நிலத்தை கவனிக்காமல் பட்டணத்தில் வாசம் செய்யும்

பண்ணையாருக்கும் இது பிடித்தமானது தான்; ஏனென்ருல் இதை அருகிலிருந்து அதிகம் கவனிக்காவிட்டாலும் கூட இது செழித்து வளர்ந்து பலன் தரும்; முந்திரி வெளிநாடுகளில் நன்கு விலேபோவதால் முந்திரியைப் பக்குவப் படுத்துபவர்கள் அதன்மேல் அதிகப் பற்று வைத்திருக்கிருர்கள். வீதி சுற்றும் வியாபாரிகளும் இதை விரும்புகிருர்கள்; ஏனென்ருல் பாரம் அதிகமில்லாமலே, இதை விற்று அவர்களுக்கு அதிக லாபம் சம்பாதிக்க முடிகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, முந்திரி அன்னியச் செலாவணியைத் தேடித்தருவதால் அரசாங்கத்துக்கும் அதன்மீது அளவில்லாத பிரியம்.

இப்போது, முந்திரி மரம் கடற்கரையோரமாக மேற்குக் கரையில் கன்னியாகுமரி முதல் பம்பாய் வரையிலும், கிழக்குக் கரையோரமாக பார்ஹாம்பூர் வரையிலும் எல்லாவிதப் பருவ காலத்திலும், பலதரப்பட்ட மண்ணிலும் வளருகிறது. முந்திரி மரச்சாகுபடி விஸ்தீரணம் இரண்டு லட்சம் ஏக்கராவுக்கும் அதிகமாகும்; அவற்றிலிருந்து வருஷமொன்றுக்கு எண்பதாயிரம் டன் முந்திரிப் பருப்புக் கிடைக்கிறது. கேரளாவில்தான் முந்திரிச் சாகுபடி விஸ்தீரணமும், உற்பத்தியும் அதிகம்.

முந்திரி மரம் பற்றிய வரலாறு சுவராஸ்யமானதாகவே இருந்தபோதிலும், அது இன்னும் பயனுள்ளதாக அமைய முடியும். இந்தியாவிலிருக்கிற நூற்றைம்பதுக்கு அதிகமான முந்திரித் தொழிற்சாலைகள் முழு நேரமும் வேலை செய்யவேண்டுமென்ருல் வருஷமொன்றுக்குச் சுமார் ஒரு லட்சத்து எழுபதாயிரம் டன் முந்திரிக் கொட்டை தேவைப்படும். எனவே நமது உற்பத்தி மிகவும் குறைவாக இருக்கிறது; தொண்ணூருயிரம் குறைவாக இருக்கிறது. இப்போது நாம், பிரிட்டிஷ்

கிழக்கு ஆப்பிரிக்காவிலிருந்து ஏறக்குறைய நமது உற்பத்திக்குச் சமமான அளவில் இறக்குமதி செய்கிறோம். கிழக்கு ஆப்பிரிக்கா போன்ற பிரதேசங்களிலுள்ள தொழிலாளர்கள் நமது தொழிலாளர்களைப் போல கொட்டை உடைப்பு வேலைகளில் அவ்வளவு திறமையுடையவர்களல்ல; அவர்கள் முந்திரிப் பருப்பைத் தனியாக எடுக்கும்போது அது உடைந்துவிடும். எனவே உலகத்தில் முந்திரி வியாபாரத்தில் இந்தியாவுக்கு அனேகமாய் ஏகபோக உரிமை இருப்பதற்கு இந்தியப் பெண் தொழிலாளிகளின் திறமை பெரிதும் காரணமென்று கூறலாம்.

ஆனல் இந்த நிலைமை வெகுநாள் நீடிக்கும் என்று சொல்லுவதற்கில்லை. இப்போது இறக்குமதியாகிற முந்திரியைக் கொண்டுகூட நமது தொழிற்சாலைகளுக்கு வருஷம் முழுவதும் முழு வேலை கிடைக்கமுடியவில்லை. இறக்குமதி செய்வதென்ருல் நமது அன்னியச் செலாவணி ஆதாரம் வெகுவாகக் குறையும்; எனவே நமது உற்பத்தியைப் பெருக்குவதுதான் ஒரே வழி. சிறந்த சாகுபடி முறைகளினல் ஏக்கரா விகித உற்பத்தியைப் பெருக்குவது, முந்திரிச் சாகுபடி விஸ்தீரணத்தை அதிகப்பத்துவது ஆகிய நடவடிக்கைகள் மூலம் உற்பத்தியைப் பெருக்கலாம்.

முறையான ஆராய்ச்சி

எந்த நிலைமைக்கும் ஈடுகொடுக்கும் வலுவுள்ள முந்திரி மரம் சமீப காலம் வரையிலும் வகை தொகையில்லாமல் வளரும்படி விடப்பட்டது. அது டாலர் சம்பாதித்துத் தருகிறது என்பது தெரிந்தவுடன், அது சம்பந்தமாய் விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சி வேலைகள் மேற்கொள்ளப்பெற்றன. இந்திய விவசாய ஆராய்ச்சிக்

கௌன்சில், சென்னை ராஜ்ய அரசாங்கம் ஆகியவற்றின் கூட்டுப் பொறுப்பின் கீழ் மங்களூருக்குப் பக்கத்திலுள்ள கோட்டெகர் என்னுமிடத்தில் மூன்றாண்டுகளுக்குமுன் மத்திய முந்திரி ஆராய்ச்சி நிலையமொன்றை ஏற்படுத்தினார்கள். முந்திரி சம்பந்தப்பட்ட விவசாயம், பொருளாதாரம், தாவர இயல், தோட்டச் சாகுபடி ஆகியவை பற்றிய விஞ்ஞான ஆராய்ச்சிகள் இந் நிலையத்தில் ஆரம்பமாயின. இப்பொழுது கேரளாவில் கொட்டாரக்கரையிலும், ஆந்திரப் பிரதேசத்தில் பாபட்லாவிலும் பம்பாயில் ரத்னகிரியிலும் பிராந்திய ஆராய்ச்சி நிலையங்கள் இருக்கின்றன. தொடர்ந்து நடைபெற்ற ஆராய்ச்சியின் பயனாக, முந்திரிச் சாகுபடியை விஞ்ஞான ரீதியிலும் லாபகரமாகவும் மேற்கொள்வதற்கான உபாயங்களைக் கண்டுபிடித்திருக்கின்றனர். முந்திரி விதையை அதன் காம்புப் பகுதி மேல்நோக்கி இருக்கும் விதத்தில் மூன்று அங்குல ஆழத்தில் ஊன்றினால், அவ்விதை பாழாகாமல் நன்கு முளைவிட்டுத் தளிர்க்கும். இச்செடிகளுக்கிடையே குறுக்கும், நெடுக்குமாக குறைந்த பட்சம் இருபது அடி இடம் விடவேண்டும். முந்திரிச் செடி நோய்கள் பூச்சிபொட்டுகள் ஆகியவை சம்பந்தமாக இந்திய விவசாய ஆராய்ச்சிக் கௌன்சிலின் ஏற்பாட்டில் பல ஆராய்ச்சிகள் தொடங்கப்பெற்றன. அதனால் நல்ல பலனும் கிடைத்திருக்கிறது.

முந்திரி விதைகளினின்றும் முளைக்கும் செடிகள் வளர்ச்சி, தன்மை, விளைச்சல் முதலிய அம்சங்களில் அதன் தாய் மரத்தைப்போல் இருக்கவேண்டுமென்பதில்லை. ஏனென்றால் தாய் மரத்தின் பூக்களில் இதர குறைந்த முந்திரிப் பூவின் மகரந்தப் பொடி கலந்து, அதிலிருந்து கிடைக்கிற விதையில் தாய் மரத்தின் முழு பாரம்பரிய குண விசேஷங்கள் காணப்படாமல் போகலாம்,

இந்தக் குறைபாட்டைத் தீர்ப்பதற்கும் ஆராய்ச்சி மூலம் வழிகண்டு பிடித்திருக்கிறார்கள். அம்மரத்திலிருந்து இளங் கொம்பை வெட்டிப் போத்தாக நடலாம். ஆனால் இது அவ்வளவு சுலபமான நடவடிக்கையல்ல. அக்கொம்பை வெட்டுவதற்கு முன்னாலேயே அதில் வேர் முளைப்பதற்குரிய (எயர்லேயரிங்) பக்குவம் செய்யப்படுகிறது. எனவே நடப்படும்போது அது,வெறும் கொம்பாக இருக்காது. இலையும் வேர்களும் நிறைந்த சிறிய கன்றாகவே இருக்கும். இச் செடி, தாய் மரத்தின் ஒரு பாகமாதலால் தாய் மரத்துக்குரிய தன்மைகளெல்லாம் அதற்குப் பொருந்தியிருக்கும். விதைகளிலிருந்து முளைக்கும் செடிகள் அப்படியல்ல. இந்த ஆராய்ச்சிகளின் பலன்கள் எல்லாம் நடைமுறையில் நன்கு கையாளப்படுவதற்குச் சில காலமாகலாம். ஆனால் நாம் எதிர்பார்க்கிற முன்னேற்றம் மிகக் கணிசமானதாகும். ஏனென்றால், இப்போது முந்திரி மரமொன்றிலிருந்து வருஷமொன்றுக்கு சராசரியாக பத்து பவுண்டு முந்திரி கிடைக்கிறது. மேற்கூறிய முறைகளின்படி மரத்தின் உற்பத்தி நூறு பவுண்டாக அதிகரிக்கும். எத்தனையோ பேர் அவ்வாறு அதிக அளவில் மாசூல் கண்டிருக்கிறார்கள்.

மன்னரிப்பை முந்திரி தடுக்கும்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் முந்திரிச் சாகுபடி விஸ்தீரணத்தை இரு மடங்காக அதிகப்படுத்தவேண்டுமென்பது லட்சியம். மத்திய அரசாங்கத்தாரின் தற்போதைய உதவித் திட்டத்தின்படி முந்திரி சாகுபடி செய்யப்படுகிற ஏக்கராவொன்றுக்கு ராஜ்ய அரசாங்கத்துக்கு நூற்றைம்பது ரூபாய் கடன் கிடைக்கும். இந்த உதவியைக் காட்டுப் பிரதேசங்களுக்கும் விஸ்தரிப்பதற்கான திட்டமும் பரிசீலனையிலிருக்கிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் ஏற்கெனவே அதிகப்படியாக முப்பதாயிரம் ஏக்கரா,முந்திரிச் சாகுபடி பின் கீழ்கொண்டு வரப்பெற்றிருக்கிறது. லட்சிய அளவின் மீதிப் பகுதி ராஜ்ய சீரமைப்பில் ஏற்பட்ட மாறுதல் காரணமாக ராஜ்யங்களுக்கு மீண்டும் பிரித்து ஒதுக்கப்பெற்றிருக்கிறது. பல ராஜ்யங்கள், முந்திரிச் சாகுபடியைத் தங்கள் மண்ணரிப்புத் தடைத் திட்டத்தில் ஒரு நடவடிக்கையாகச் சேர்த்துக் கொண்டிருக்கின்றன. முந்திரிச் செடிகள் கன்றுகளாக இருக்கும்போதே கிளைவிட்டு இலை நிறைந்து செழித்து மரமாக வளர ஆரம்பித்துவிடுகின்றன. எனவே, காற்றில் மண் கிளம்பிச் செல்லாமல் மரம் பாதுகாத்துக் கொள்கிறது. எனவே, மணற்பாங்கான பிரதேசத்தில் ரயில் பாதை ஓரங்களில் இச் செடிகளை நடுவது மிகவும் நல்லது. ரயில் தடத்தில் மண் மூடிக் கொள்ளாமல் அது பாதுகாக்கிறது. ஆந்திராவில் பாபட்லாவைச் சுற்றி இந்த முறையைச் சென்ற மூன்று வருஷங்களாகப் பரிசோதனை செய்தனர். இதனால் ரயில் தண்டவாளத்தைப் பராமரிப்பதற்கான செலவு வெகுவாகக் குறைந்திருக்கிறது.

பல்வேறு உபயோகங்கள்

முந்திரி மரங்களிலிருந்து கிடைக்கிற பருப்பு மட்டுமின்றி முந்திரிக் கொட்டைத் தோடுகளையும் லாபகரமாகப் பயன்படுத்தலாம். முந்திரித் தோடுகளிலிருந்து கிடைக்கும் எண்ணெய் தண்ணீர் தடைப் பொருளாகவும் வார்னீஷ் தயாரிப்புப் பொருளாகவும் உபயோகமாகிறது. முந்திரிப் பழத்தையும் நல்ல முறையில் பயன்படுத்தலாம். முந்திரிப் பழத்தைப் பற்றிய தாவர சாஸ்திர ஆராய்ச்சி சுவாரஸ்யமானது. "கொல்லா மாம்பழம்" அல்லது முந்திரிப் பழமென்று குறிப்பிடப்படுகிற இப்

பழம்'' உண்மையில் பழமல்ல. இது முந்திரிக் கொட்டையின் காம்புதான். அக்காம்பு ஆரஞ்சு சிவப்பு, மஞ்சள் ஆகிய நிறங்கள் பெற்று சதைப் பகுதி அல்லது கதுப்பு பெற்றுப் பழம் போலாகிவிடுகிறது. இயற்கையின் விநோதங்களில் இதுவும் ஒன்றாகும். முந்திரி இனவிருத்தியாக வேண்டுமென்ற இயற்கை நியதியால், அதன் விதைகளைப் பறவைகள் பரப்புவதற்காக, பறவைகளுக்கு வேண்டிய பழம்போல் அதை இயற்கை படைத்திருக்கிறது. முந்திரி கொட்டை கெட்டியான தோடு இருப்பதால் எந்தப் பறவையும் அதைத் தானாக நாடிவராது. எனவே அதனுடன் பழம் போன்ற காம்பு சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. பறவைகளை மயக்க இயற்கை செய்திருக்கும் ஒரு ஏற்பாடே இது. ஒவ்வொரு வருஷமும் இரண்டரை லட்சம் டன் முந்திரிப் பழம் வீணாகி விடுவதாக மைசூரிலுள்ள மத்தியஉணவுத் தொழில் நுட்ப ஆராய்ச்சி நிலையம் கணக்கெடுத்திருக்கிறது. அப்பழத்தின் சாறு கரகரப்பாய் இருக்குமாதலால் அது சாப்பிடுவதற்கு அவ்வளவாக உகந்ததல்ல. ஆனால் இப்பழத்திலிருந்து பலவித பழப் பதனப் பொருள்களைத் தயாரிக்கலாம். பழப் பதனத் தொழில்துறையினர் இதில் ஈடுபட்டால், இந்தியாவைத் தேடி வந்த இந்த முந்திரி மரங்கள் இந்தியாவின் சுபீட்சத்துக்கு இன்னும் அதிக உதவியைச் செய்யமுடியும்.

# தென் துருவம்

தென் துருவ மண்டலத்தில் மலைகள் உண்டு, ஆனால் மரங்கள் இல்லை. மனித அடிச்சுவடே படாத அந்தப் பகுதியில் காமன்வெல்த் விஞ்ஞானிகள் பிரயாணம் செய்தார்கள். அங்கு கிடைக்கும் நிலக்கரியிலிருந்தும் 'பாஸில்' களிலிருந்தும் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, அங்கு உஷ்ணப் பிரதேச சீதோஷ்ண நிலை இருந்திருக்கலாம் என்று ஊகிக்க முடிகிறது.

டாக்டர் விவியன் புஷ்ஷும் அவருடைய சகாக்களும் அன்டார்டிகா (தென் துருவ) கண்டத்தில் இரண்டாயிரம் மைல் பிரயாணம் செய்தது அரியதோர் சாதனையாகும். தென் துருவமண்டலத்தில், ஒரு கரையிலிருந்து மறு கரைக்கு தென் துருவத்தின் வழியே சென்ற விஞ்ஞானிகள் அங்கு சோதனைகளை நடத்தினார்கள். பூமியின் நிலை, படிந்துள்ள பனிக் கட்டியின் கனம், காற்று வீச்சு எனப் பல தகவல்களைச் சேகரித்தார்கள். தென் துருவப்பிரதேசத்தைப் பற்றிச் சரியான தகவல்கள் இல்லை. அங்கு நிலப் பகுதி பனிக் கட்டியில் மறைந்து கிடக்கிறதா, அது ஒரே பரப்பா, பல தீவுகளா, பனி உறைந்திருப்பதால், பல தீவுகள் இணைந்து ஒரே பரப்பாகத் தோன்றுகிறதா என கேள்விகள் எழுந்தன. இந்த யாத்திரைக்குப் பிறகு பல கேள்விகளுக்கு விடை கிடைத்து விட்டது.

யாத்திரைக் கோஷ்டியிலிருந்த பௌதீக விஞ்ஞானி திரு. ஜ்யாப்ரே பிராட், சுமார் முப்பது மைல்களுக்கு ஓரிடம் வீதம், பூமியைத் தொளைத்து, பனிக்

கட்டியின் கனத்தை அளந்து வந்தார். எண்ணெய் ஊற்றுக்களைக் கண்டுபிடிக்க உபயோகிக்கும் 'எதிரொலிப் பொறி' போன்றதோர் சாதனத்தை அவர் உபயோகித்தார். இந்தச் சாதனத்தில் வெடிதீர்க்கும் பொறியும், வெடிச் சப்தத்தையும், அதன் எதிரொலியையும் பதிவு செய்யும் மைக்ரோபோன் போன்ற கருவிகளும் உண்டு. பூமியில் தொளையிட்டு,டைனமைட்டைச் செலுத்தி வெடி தீர்க்கப்படும். வெடிச் சப்தம், பூமியின் கர்ப்பத்தில் ஒரு குறிப்பிட்டதூரம்வரைச் சென்று திரும்பும். வெடிச் சப்தம் எழுந்த நேரத்தையும் எதிரொலி கிடைக்கும் நேரத்தையும் கொண்டு, பனிப்படிவத்தின் கனத்தை நிர்ணயிக்க முடியும்.

சில இடங்களில் நாலாயிரம் அடி கனத்திற்குப் பனி படிந்திருந்ததாகத் தெரிந்தது. அன்டார்டிகா கண்டத்தில் ஒரு கரையிலிருந்து மறு கரை வரையில் நெடுக, பனிப் படிவத்தின் கனத்தை அளந்து சென்றது அரிய சாதனையாகும். இதனால், பனி எங்கு அதிகமாகப் படிந்துள்ளது என்பதைத் தெரிந்துகொள்ளவும் முடிந்தது. டாக்டர் புஷ் கடந்து சென்ற இடமெல்லாம் நிலப்பரப்பு என்பதும் தெரிந்தது.

### மலைகள் நிறைந்த பரப்பு

இந்த ஆராய்ச்சியால் வேறு பல தகவல்களும் கிடைத்தன. அன்டார்டிகாவில், கடலோரப் பகுதியில் துருவத்தை வளையமிட்டதுபோல மலைத் தொடர்கள் இருப்பதாகத் தெரிகிறது. துருவத்தைச் சுற்றியுள்ள உட்பகுதியில் பனியின் கனம் அதிகமாக இருக்கிறது. நிலப்பரப்பு கடல் மட்டத்திற்கு மேலேதான் இருக்கிறது. டாக்டர் புஷ் சென்ற வழியிலுள்ள பனிக் கட்டியை அப்புறப்படுத்துவது சாத்தியமானால் மிகப் பரந்த பூமி,

கடல் மட்டத்திற்கு மேலே இருப்பது தெரியும். இது தான் அன்டார்டிகா (தென்துருவ) கண்டம்.

கடலோரத்திலிருக்கும் மலேகளேவிட உள்நாட்டிலிருக்கும் மலேகள் உயரம் குறைந்தவை. தென் துருவத்தைச் சுற்றியுள்ள நிலப்பரப்பு—அன்டார்டிகா கண்டம்-கிண்ணம் போல-நடுவில் குழியும் சுற்றிலும் விளிம்பு போல மலேகளும் உடையதாக-இருக்கிறது. பூமியின் இயல்பு பற்றி விஞ்ஞானிகளுடைய ஊகம் பலவகைப்பட்டது. மிதக்கும் நிலப்பரப்புப் பற்றியும் பனிக் கட்டியின் இறுக்கத்தைப் பற்றியும் பலவிதமாகக் கூறியிருக்கிறுர்கள். தென் துருவப் பிரதேச ஆராய்ச்சியில் பல புதிர்களுக்கு விடை கிடைத்திருக்கிறது.

நிலக்கரி படிவு

பிரயாணம் தொடங்கிய இடத்தில் அடுக்கு அடுக்காக நிலக்கரி படிந்திருப்பதைக் கண்டு பிடித்திருக்கிறுர்கள். பல இடங்களில் உஷ்ணப் பிரதேச தாவரங்களின் 'பாஸில்கள்' கிடைத்தன. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, தென் துருவமண்டலத்திலும் உஷ்ணப்பிரதேச சீதோஷ்ண நிலே இருந்திருக்ககூடும் என்பதையே இவை காட்டுகின்றன; அல்லது அந்தப் பரப்பு பூமத்திய ரேகைக்குச் சமீபத்திலிருந்து சிறுகச் சிறுக விலகிச் சென்றிருக்கலாம். அங்குள்ள பனி உருகி ஓடுவதில்லே. இதனுல் கால நிர்ணயம் செய்வது சாத்தியமாகிறது. பனிக்கட்டி, அடுக்காகப் படிந்திருக்கிறது. அடுக்குகளின் நடுவே தாவரங்களின் சின்னங்களும், விண் கொள்ளிகளின் சிட்டமும் கிடைத்துள. மரத்தின் வைரத்திலிருந்து-குறுக்கு வரிகளிலிருந்து-அதன் வயதைஊகிப்பது போல, பனி அடுக்குகளிலிருந்து அந்தப் பகுதியின் காலத்தை ஊகிக்கமுடியும்போலும்.

# உலகில் மிகப் பெரிய நகரம்

மக்கள் தொகையில் உலகத்தில் மிகப் பெரிய நகரம் எது? நியூயார்க் நகரம் மிகப் பெரிய நகரம் என்று மக்கள் தொகை பற்றிய ஐக்கிய நாடுகள் சங்க வெளியீடு கூறுகிறது. நியூயார்க்கின் மக்கள் தொகை 77,95,471. அந் நகரம் ஐந்து பகுதிகளாக உள்ளது. அவ் வெளியீட்டின் படி ஜப்பானின் தலைநகரான டோக்கியோ உலகத்தில் இரண்டாவது பெரிய நகரம்.

வானளாவும் கட்டிடங்கள் பெருகிக் கொண்டு போகின்றன. 1947 ஆம் ஆண்டில் கட்டிடங்கள் கட்டும் புதிய ஆர்வம் ஏற்படலாயிற்று, வருஷத்துக்கு வருஷம் அது அதிகமாகிக் கொண்டே போகிறது. 1957 ஆம் ஆண்டு மத்தியில் காரியாலயங்களுக்காகக் கட்டப்பட்ட கட்டிடங்கள் 516. சிலவற்றின் வேலை முடிந்திருந்தது; சிலவற்றின் வேலை நடந்து கொண்டிருந்தது. அவற்றிற்கான செலவு நானூறு கோடி ரூபாய்.

"நாட்டின் முதன்மையான காரியாலய நகரம் நியூயார்க்" என்பது ஒப்புக் கொள்ளப்பட்டு வருவதே அங்கு காரியாலயங்கள் பெருகி வருவதற்குக் காரணம் என்று சொல்லப்பட்டது. மற்ற அமெரிக்க நகரங்களிலும் கட்டிடங்கள் பெருகுகின்றன. முக்கியமாக மேற்குக் கடற்கரையில் கட்டிடங்கள் அதிகமாகக் கட்டப்படுகின்றன. எனினும், நியூயார்க் இன்னும் நிதித் துறையில் நாட்டின் தலைநகரமாக விளங்கி வருகிறது; நாட்டிலுள்ள தொழில்

கள் பலவற்றிற்கும், வாணிப நிலையங்கள் பலவற்றிற்கும் தலைமையகமாகவும் திகழ்ந்து வருகிறது.

தொழில் துறையில் நியூயார்க்கின் நிலை இணையற்றது. தொழில் புரட்சி ஏற்படுமுன்னரே நியூயார்க்கில் மக்கள் குடியேறினார்கள். அதன்பின் தொழில் துறையில் பல்வகை முன்னேற்றங்கள் ஒன்றன்பின் ஒன்றாக அங்கு ஏற்பட்டன. எல்லாத் தொழில்களும் அங்கு தொடங்கப் பெற்றவையாகும்; இல்லாவிடில் அங்கு வளர்ச்சி பெற்றவையாகும். ஆயினும் இக்காலத் தொழில் நுட்பங்கள் வளர்ச்சி பெறவே, தொழில்களெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாய் வேறு இடங்களுக்கு செல்வனவாயின. அவ்வாறு ஏற்பட்டும், நியூயார்க் நகரத்தின் தொழில் முயற்சிகள் குறையவில்லை.

நியூயார்க்கில் கனரகத் தொழில்கள் அதிகமாக இல்லை; முற்றும் இல்லை யென்றே சொல்லலாம். எனினும், பல பொருட்கள் நியூயார்க்கில் செய்யப்படுகின்றன. ஆயினும் நியூயார்க் எத்தகைய உற்பத்தியும் செய்ய வில்லை என்றும் சொல்லலாம். முக்கியமாக அது உற்பத்திக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து வழிவகுக்கும் இடமாக விளங்குகின்றது.

தனித்தனித் தொழில்களாக நோக்கினால், ஆடை செய்வதே நியூயார்க்கிலுள்ள பெரிய தொழில். ஆயினும் நியூயார்க்கில் துணிகள் உற்பத்தி செய்யப்பெறவில்லை. நியூயார்க்கில் ஆடைகளை அமைத்தல், துணிகளை வெட்டுதல், தைத்தல், விற்றல் முதலியவை நடைபெறு கின்றன. விற்பனை விளம்பரங்களும் பலவிதமாகச் செய்யப்படுகின்றன.

நூல் வெளியீடு, உணவு, குடிவகைகள் செய்தல், இலேசான உலோக வேலை ஆகியவை ஆடை செய்யுந்

தொழிலுக்கு அடுத்தபடியாக உள்ள தொழில்கள். மக்களின் போக்குவரத்து, சாமான்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குக் கொண்டு போவது ஆகிய வேலைகளில் பலர் ஈடுபட்டுள்ளனர். கப்பல்துறை சம்பந்தமாகப் பல்வகை வேலைகள் செய்வோரும் அதிகமாக இருக்கின்றனர்.

நியூயார்க் நகரம் முதலில் தோன்றிய இடம் மன்ஹாட்டன் தீவு. அங்கிருந்து வெஸ்ட் செஸ்டர் கவுண்டி வரை நகரம் முதலில் வளர்ந்து கொண்டுபோனது. அதன்பின் அது ஐந்து பகுதிகளாக அமைக்கப்பெற்றுள்ளது. புரூக்லினும், லாங் ஐலண்டிலும், ஸ்டேட்டன் ஐலண்டிலும் உள்ள பகுதிகளும் அவற்றைச் சேர்ந்தவை.

நகரத்தின் மத்தியில் உள்ளது மன்ஹாட்டான்பகுதி. நியூயார்க் நகரத்தின் மத்திய ஆட்சியின் தலைமையகம் அங்கு உள்ளது. மன்ஹாட்டன், பிரான்க்ஸ், புரூக்லின் குயின்ஸ், ரிச்மாண்ட் ஆகியவை நியூயார்க்கின் ஐந்து பகுதிகள். ஒவ்வொன்றிற்கும் ஒரு தலைவர் இருக்கிறார். நியூயார்க்கின் மேயர் தலைமை நிர்வாகியாக உள்ளார். 1790-ஆம் ஆண்டுவரை நியூயார்க், நாட்டின் தலைநகரமாக இருந்தது. அப்பொழுது அதன் ஜனத்தொகை முப்பத்து மூவாயிரம். 1797–ஆம் ஆண்டுவரை அது நியூயார்க் ராஜ்யத்தின் தலைநகரமாக இருந்தது.

நியூயார்க் நகரத்தின் பரப்பு முந்நூற்று அறுபது சதுரமைல்; அதன் அதிகமான நீளம் முப்பத்தாறுமைல்.

நியூயார்க்கில் எண்ணிறந்த விசேஷமான இடங்கள் உள்ளன. தண்ணீருக்குள் செல்லும் குழாய் வழிகளும், தொங்கு பாலங்களும், வானை முட்டும் கட்டிடங்களும் அங்கு உள்ளன.

ஹாலண்டு குழாய்வழி, ஹட்லன் நதியில்செல்கிறது. மோட்டார் வண்டிகள் போகுமாறு தண்ணீருக்கு அடியில் முதன் முதல் அமைக்கப்பட்ட மிக நீளமான குழாய்வழி அதுவே. அவ்வாறே, உலகத்தில் தண்ணீருக்கு அடியில் செல்லும் முக் குழாய்வழி லிங்கன் குழாய் வழியே.

ஹட்ஸன் நதியிலுள்ள ஜார்ஜ் வாஷிங்டன் பாலமே உலகத்திலுள்ள இரண்டாவது பெரிய தொங்கு பாலம். அதில் 1931ஆம்ஆண்டில் போக்குவரவு ஆரம்பமாயிற்று.

நியூயார்க் என்றதும் எம்பையர் ஸ்டேட் கட்டிடத்தைப் பற்றிய எண்ணம் மனத்தில் முக்கியமாகத் தோன்றலாம். உலகத்தில் மிகவும் உயர்ந்த கட்டிடம் அதுவே. அது 102 மாடிகள் கொண்டது. அதில் 72 எலிவேட்டர்கள் (மின்சார ஏணிகள்) உள்ளன; இரண்டு தளங்கள் உள்ளன. 25,000 பேர் அங்கு குடியிருக்கலாம். அதன் உச்சியில் உள்ள வானிலை ஆராய்ச்சிக் கூடங்களைக்காண செல்வோர் வருஷத்துக்கு பத்து லட்சம் பேர்.

கிரைஸ்லர், உல்வொர்த் கட்டிடங்களும், புதிய ஐக்கிய நாடுகள் சங்கத் தலைமையகமும் கண்கவரும் அமைப்புள்ளவை.

ராக்பெல்லர் நிலையம் நியூயார்க் நகரத்தில் உள்ளது. அமெரிக்காவிலுள்ள மிகப் பெரிய வாணிப நிலையம் அதுவே. அமெரிக்காவில் தனியாருக்குச் சொந்தமான மிகப் பெரிய வாணிப நிலையம் அதுவே. அந்த இடமே அமெரிக்காவிலுள்ள மிகப் பெரிய பொழுதுபோக்கு இடமாகவும் விளங்குகிறது. அங்கு நாடக அரங்குகளும், வானொலி நிலையங்களும், டெலிவிஷன் நிலையங்களும் உள்ள பகுதியை ரேடியோ நகரம் என்று கூறுவர்.

மற்ற இடங்களில் உள்ளது போலவே, நியூயார்க்கிலுள்ள சிறந்த காட்சிகளைக் கட்டணமின்றிப்பார்க்கலாம்.

உலக முழுவதும் தெரிந்த நியூயார்க் தெருக்களில் நடப்பதே ஆனந்தமாக இருக்கும். ஒவ்வொரு வீதிக்கும் அதற்குரிய புகழ் உண்டு, பிராட்வே நாடக அரங்குகளும் படக்காட்சிச் சாலைகளும் உள்ள வீதி. ஐந்தாம் தெரு நவநாகரிகம் அலங்காரம் என்னும் பொருள்படுவதாக விளங்குகின்றது.

மெட்ரோபாலிட்டன் கலைப் பொருட்காட்சிச்சாலையும் நியூயார்க் பொது நூல்நிலையமும், கலை, இலக்கிய நிலையங்களில் முதன்மையாகத் திகழ்கின்றன. அசீரியா, எகிப்து கிரீஸ், ரோம், சமீபக் கிழக்கு, தூரக் கிழக்கு ஆகியவற்றின் பழைய கலைகளைக் காட்டும் தொகுப்புக்களையும் ஐரோப்பா, அமெரிக்கா ஆகியவற்றின் கலைகளைக் காட்டும் தொகுப்புகளையும் மெட்ரோபாலிட்டன் பொருட்காட்சிச் சாலையில் காணலாம். அதனைப் போன்ற காட்சிச்சாலைகளில் அதுவே மிகப் பெரியது. அதில் பத்து லட்சத்துக்கு மேற்பட்ட கலைச் சின்னங்கள் உள்ளன.

நியூயார்க் பொது நூல்நிலையம் அமெரிக்காவிலுள்ள மூன்று பெரிய நூல்நிலையங்களுள் ஒன்று. மற்றவை வாஷிங்டனிலுள்ள காங்கிரஸ் நூல்நிலையமும், ஹார்வர்டு சர்வகலாசாலை நூல்நிலையமும் ஆகும். நியூயார்க் பொது நூல்நிலையத்துக்கு எண்பது கிளை நூல்நிலையங்கள் உள்ளன.

நியூயார்க்கில் பல்வகை இனத்தவர் வாழ்கின்றனர், சீனர், ஜெர்மானியர், இத்தாலியர், ஸ்பானியர் ஆகியோர் குடியிருக்கும் பகுதிகள் அங்கு உள்ளன. போர்ட்டோரிக்கோவைச் சேர்ந்தவர்கள் மட்டும் ஐந்துலட்சத்துக்கு அதிகம்.

# பிரிட்டன் - ஜோர்டான் உறவு

[ஜோர்டான், மத்திய கிழக்கிலுள்ள அரபு நாடுகளில் ஒன்று. ஜோர்டானுக்கு வடக்கே சிரியா, வடகிழக்கே இராக், தெற்கே சவூதி அரேபியா, மேற்கே இஸ்ரேல் முதலிய நாடுகள் உள்ளன. ஜோர்டானின் நிலப்பரப்பு முப்பத்தேழாயிரத்து ஐந்நூறு சதுர மைல். ஜனத் தொகை பதினைந்து லட்சம். பெரும்பான்மையோர் அராபிய முஸ்லிம்கள், அராபியக் கிறிஸ்துவர்கள் சுமார் ஒன்றேமுக்கால் லட்சம். தலைநகரின் பெயர் அம்மன்.]

ஜோர்டானிலுள்ள ஹாஷிமிதிய அரசுக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும், 1916-ஆம் ஆண்டில் தொடர்பு ஏற்பட்டது. அந்த ஆண்டில், பாலஸ்தீன மக்கள் உதுமானியப் பேரரசை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தார்கள். துருக்கி சாம்ராஜ்யத்தி லடங்கிய டிரான்ஸ் ஜோர்டானையும் பிற பகுதிகளையும் விடுவிக்க, மெக்காவைச் சேர்ந்த ஷெரீப் ஹுசேன் (இப்போதுள்ள ஜோர்டான் மன்னனுடைய முப்பாட்டன்) தலைமையில் அரபு மக்கள் புரட்சி செய்தார்கள். அந்தப் புரட்சிக்கு பிரிட்டிஷாரின் ஆயுதங்களும் ஆதரவும் கிடைத்தன.

1920-ஆம் ஆண்டில் சர்வதேசச் சங்கம், பாலஸ்தீன காப்பு நாட்டுடன் டிரான்ஸ் ஜோர்டானை இணைத்தது. இந்த நாடுகளை நிர்வகிக்கும் பொறுப்பு பிரிட்டிஷ் அரசுக்கு ஏற்பட்டது. பிரிட்டிஷ் அரசாங்கம் அரபு மக்களுடைய சுதந்திர வேட்கையை ஆதரிப்பதாகக்

கூறியிருந்தது. பாலஸ்தீனத்தில் யூத மக்களுக்குத் தாயகம் காண உதவுவதாகவும் வாக்களித்திருந்தது. இவற்றை நிறைவேற்றும் நோக்கத்துடன் பிரிட்டிஷ் அரசாங்கம் ஜோர்டான் நதிக்குக் கிழக்கிலுள்ள பிரதேசத்தை காப்பு ஆட்சியிலிருந்து பிரித்துத் தனி ஆட்சி காண முடிவு செய்தது.

1921–ஆம் ஆண்டில், ஹெஜாஸ் மன்னர் ஹுசேனுடைய இளைய குமாரர் அமீர் அப்துல்லாவை டிரான்ஸ் ஜோர்டானின் தாற்காலிக நிர்வாகத்தலைவராக,பிரிட்டிஷ் அரசு ஏற்றுக் கொண்டது. 1923-ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதத்தில் டிரான்ஸ் ஜோர்டானில் அமீர் அப்துல்லாவின் தலைமையில் தனி அரசு ஏற்படுவதை—சர்வதேசச் சங்கத்தின் ஒப்புதலை எதிர்பார்த்து — அனுமதிப்பதாகப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அறிவித்தார்கள். அந்தத் தனியரசு சட்டபூர்வமானதாகவும், அந்தப் பிரதேச ஆட்சியில் பிரிட்டனுக்குள்ள சர்வதேசப் பொறுப்புகளை ஏற்றுக் கொள்வதாகவும் இருக்கவேண்டுமென்று ஓர் உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது.

சுதந்திரப் பிரகடனம்

அமீர் அப்துல்லா, 1923–ஆம் ஆண்டு மே மாதத்தில் ஒருநாள் டிரான்ஸ் ஜோர்டானை சுதந்திர நாடாகப் பிரகடனம் செய்தார். சவூதி அரேபியா மக்கள், எல்லை கடந்து நுழைந்ததாலும் வேறுவழிகளிலும் உள்நாட்டுச் சிக்கல்கள் இருந்தன. ஆயினும் தனிநாடு முயற்சியில் சமரசப் பேச்சு நடந்து கொண்டிருந்தது. சர்வதேசச் சங்கத்தின் காப்பாட்சிக் கமிஷன், நாட்டின் நிர்வாகத்தையும் சட்டமியற்றும் உரிமையையும் பிரிட்டிஷ் அரசிடம் ஒப்படைத்திருந்தது. இவற்றை நிறைவேற்றும் முறையில் சட்டபூர்வமானதோர் அரசை,

அமீர் அப்துல்லாவின் மூலம் நடத்துவதுபற்றி 1928ஆம் ஆண்டு பிப்ரவரியில் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது.

வெளிவிவகாரங்களிலும்,ஒரு சில ஆதாரச் சட்டங்களை அமல் நடத்துவதிலும், பிரிட்டிஷ் அரசாங்கத்தாருடைய ஆலோசனைகளை ஏற்க, அமீர் அப்துல்லா சம்மதித்தார். டிரான்ஸ் ஜோர்டானில் பிரிட்டிஷ் ரெஸிடெண்டு நியமிக்கப்பட்டார். இவர் பாலஸ்தீனத்திலுள்ள பிரிட்டிஷ் தூதருடைய ஆணைக்கு அடங்கிப் பணியாற்றினர்.

டிரான்ஸ் ஜோர்டானில், 1946-ஆம் ஆண்டில் காப்பு ஆட்சி முடிந்தது. அந்த ஆண்டில் பிரிட்டனும் ஜோர்டானும் செய்துகொண்ட நேச உடன்படிக்கைப்படி, ஜோர்டான் பூரண சுதந்திர நாடாயிற்று. அமீர் அப்துல்லா மன்னர் அப்துல்லா என்று பெயர் சூட்டிக் கொண்டார். நாட்டின் பெயரும் "ஹாஷிமிதிய அரசின் ஜோர்டான்" என்ருயிற்று.

1948-ஆம் ஆண்டில் பிரிட்டனும் ஜோர்டானும் புதியதோர் உடன்படிக்கை செய்து கொண்டன. அதன் படிப் போர்க்காலத்தில் ஒன்றுக்கொன்று ராணுவ உதவிகளைச் செய்வதாக ஒப்புக் கொள்ளப்பெற்றது. அமைதிக் காலத்தில் ஜோர்டான் வழியாக பிரிட்டிஷ் படைகள் செல்ல வசதிதரவும், அம்மன், மாப்ரக் விமான நிலையங்களில் பிரிட்டிஷ் விமானப் படையை நிறுத்தி வைத்துக் கொள்ளவும் ஜோர்டான் சம்மதித்தது.

கேந்திரம், பயிற்சி, சாதனம், பாதுகாப்பு ஆகிய துறைகளில் இருநாடுகளும் இணைந்து செயலாற்ற கூட்டுப் பாதுகாப்புக்குழு ஒன்றை அமைக்க வேண்டுமென்பது உடன்படிக்கையின் ஓர் அம்சம். ஜோர்டான் படைகளுக்குப் பயிற்சிதரும் பொறுப்பை பிரிட்டன்

ஏற்றுக் கொண்டது. 1920-ஆம் ஆண்டு இறுதியில், ஆங்கிலேய தளகர்த்தர் தலைமையில் அரபுச் சேனை (அரப் லீஜியன்) ஒன்று அமைக்கப்பெற்றது. அதைப் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரே பராமரித்து வந்தார்கள். அந்தப் படையின் பராமரிப்புச் செலவைத் தொடர்ந்து ஏற்க, பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஒப்புக்கொண்டார்கள்.

காப்பு ஆட்சி முடிவு

உடன்படிக்கை கையெழுத்தாகி இரண்டுமாதங்களில் பாலஸ்தீனத்தில் காப்பு ஆட்சி முடிந்தது. அதைத் தொடர்ந்து நடந்த பாலஸ்தீனப் போரில் அரபுச் சேனை மற்ற அரபு நாட்டுப் படைகளுடன் மூன்று இஸ்ரேலியப் படைகளை எதிர்த்தது. 1949ஆம் ஆண்டில் ஜோர்டானின் எல்லை வரையறுக்கப்பட்டது. பாலஸ்தீன அரபுக்கள் வசமிருந்த பகுதிகள்—காஸா நீங்கலாக—ஜோர்டானுடன் இணைப்பதைப் பிரிட்டன் ஏற்றுக் கொண்டது.

அடுத்த சில ஆண்டுகளில், நாட்டில் பல நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. ஜெருஸலத்திலுள்ள ஒரு மசூதியில் நுழைந்தபோது, மன்னர் அப்துல்லாவை ஒரு பாலஸ்தீன இளைஞன் சுட்டுக் கொன்றான். இது 1951 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் நிகழ்ந்தது, மன்னர் சுட்டுக் கொல்லப்பட்டபோது இளவரசர் தலால், மன நோய்க்காகச் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தார். ஆயினும் அவர் அரசுக் கட்டிலேறினர். அவருடைய ஆட்சிக்காலத்தில்தான் புதிய அரசியல் திட்டம் (1932-ஆம் ஆண்டு ஜனவரியில்) அமலுக்கு வந்தது. நோய் மீறிப்போனதால் தலால், அதே ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் பட்டம் துறந்தார். அவருடைய மகன், இளவரசர் ஹுசேன் பட்டத்திற்கு வந்தார். அப்போது அவருக்கு வயது பதினேழு. ஆதலால் அவர் பிராயம் வந்து பொறுப்பு

எற்கும் வரையில் நாட்டை ஆள ராஜாங்க சபை நியமிக்கப்பெற்றது. 1953-ஆம் ஆண்டு மே மாதத்தில் மன்னர் ஹுசேன் நாட்டின் நிர்வாகப் பொறுப்பை ஏற்ருர்.

1954-ஆம் ஆண்டில் பிரிட்டிஷ்-ஜோர்டான் உடன்படிக்கையை - 1948 இல் ஏற்பட்டது — திருத்தியமைக்க வேண்டுமென்ற பேச்சு எழுந்தது. 1948இல் உடன்படிக்கை செய்துகொண்டபோது இருபது ஆண்டுகளுக்கு அதை அமல் நடத்துவதென ஒப்புக் கொள்ளப்பட்டது. ஜோர்டான் அரசுரிமை கோரியதால், 1957-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் உடன்படிக்கை ரத்துச் செய்யப்பட்டது. இதற்கிடையில் ஓர் முக்கியமான நிகழ்ச்சி ஏற்பட்டது. அரபுச் சேனையின் தளகர்த்தர் ஜெனரல் கிளப்பை, மன்னர் ஹுசேன் ஒரு விசேஷ உத்தரவின் மூலம், 1956-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில், பதவியிலிருந்து நீக்கினர். ஆங்கிலேயரான ஜெனரல் கிளப் 1939-ஆம் ஆண்டிலிருந்து அரபுச் சேனையின் தளகர்த்தராகப் பணியாற்றியவர்.

பிரிட்டன் உதவி

உடன்படிக்கைக் காலத்தில் பிரிட்டன் ஜோர்டானுடன் நட்புரிமை காட்டிப் பழகிற்று. உதவிகளைச் செய்தது. ஐக்கிய நாடுகள் சபையில் ஜோர்டானை ஆதரித்தது.

ஜோர்டானுக்குப் பொருளாதார உதவிகளைச் செய்வதிலும், பிரிட்டன் அக்கறை காட்டிற்று. அரபுச் சேனைக்கு 1956-ம் ஆண்டு மே மாதத்திலிருந்து ஜோர்டான் அரபுச் சேனை என பெயர் மாற்றப்பட்டது. பராமரிப்பு மான்யமளிப்பது தவிர அரபு நாட்டு நிர்வாகத்திற்கே, மான்யமாகவும் வட்டியில்லாக் கடனாகவும் நிதி உதவி செய்தது. 1955-56-ஆம் ஆண்டில் அரபுச் சேனை

பராமரிப்புக்காக அளிக்கப்பட்ட தொகை சுமார் பன்னிரண்டு கோடி ரூபாய். 1949-ஆம் ஆண்டு ஏப்ரலுக்குப் பிறகு பிரிட்டன் அளித்த இதர உதவிகளின் மொத்தத் தொகை பத்துக் கோடி ரூபாய்.

வேறு ஒரு வகையிலும் பிரிட்டன் ஜோர்டானுக்கு உதவியளித்து வருகிறது. பாலஸ்தீன அகதிகளில் பெரும்பகுதியினர் ஜோர்டானில் வாழ்கிறார்கள். இவர்களுக்கு புனர்வாழ்வுதர, ஐக்கிய நாடுகள் சங்க ஸ்தாபனங்கள் பணியாற்றுகின்றன. பாலஸ்தீன அகதிகள் நிதிக்கு 1956-ஆம் ஆண்டு ஜூன் வரையில், பிரிட்டன் இருபது கோடி ரூபாய் உதவியிருக்கிறது. அகதிகள் கஷ்ட நிவாரணத்திற்கு, அமெரிக்காதான், அதிக அளவில் நிதி உதவி அளித்திருக்கிறது. அதற்கு அடுத்தபடியாக பிரிட்டன் உதவியிருக்கிறது.

ஜோர்டான் அரசாங்கத்தின் கோரிக்கைக்கு இணங்கியே 1948-ஆம் ஆண்டு உடன்படிக்கை ரத்து செய்யப்பட்டது. இரு நாடுகளுக்கிடையே நிலவும் நட்பும் நல்லுறவும் நீடிக்கும் முறையில் இரு சாராரும் சம்மதித்து அந்த உடன்படிக்கையை ரத்து செய்கிறோம் என்று அப்போதிருந்த ஜோர்டான் பிரதம மந்திரி கூறினார்.

இதுபற்றி சென்ற ஆண்டில் காமன்ஸ் சபையில் வெளிவிவகார உதவி மந்திரி பின்வருமாறு கூறினார்:— நாம் மன்னர் ஹுசேனும் அவருடைய நாடும் செழிப்புடன் வாழ வேண்டும் என்றும் நமது நட்புறவு நீடிக்க வேண்டும் என்றும் விரும்புகிறோம். மத்திய கிழக்கில் அமைதி நிலவ, ஜோர்டான் உரிமையுடனும் பலத்துடனும் வாழ்வது அவசியம் என்று பிரிட்டிஷ் அரசாங்கத்தார் கருதுகிறார்கள்.

# ஹெலன் கெல்லர்

டி. டி. மாணிக்கம்

"நான் ஆசிரியையும் அல்ல, பிரசங்கியும் அல்ல; உலகமெங்கும் இடர்ப்பாடுள்ள மக்கள்மீது இறைவன் வீசுகின்ற ஒளிக்கு நான் மகிழ்ச்சி ததும்பும் சான்ருக விளங்குபவள்" என்று டாக்டர் ஹெலன் கெல்லர் கூறினர்.

1955-ல் அவர் இந்தியாவுக்கு வந்தபோது, அவருடைய வருகை "இந்தியாவுக்கு அமெரிக்கா வழங்கிய நன்கொடை" என்று பிரதமர் நேரு சொன்னர்.

ஹெலன் கெல்லர் என்னும் இந்த அதிசயப் பெண் மணிக்குக் கண்ணும் தெரியாது, காதும் கேளாது, பேசவும் முடியாது. எனினும் அவர் பல நூல்களின் ஆசிரியர்; பலருக்குக் கல்வியூட்டுபவர்; இயற்கைக் குறைபாடு உள்ளோர் நிலைமையைப் பற்றிப் பொது மக்களுக்கு உணர்ச்சியூட்டும் பொருட்டு ஐந்து முறை உலகைச் சுற்றி வந்துள்ளார்.

ஹெலன் 1880-ஆம் ஆண்டு ஜூன் 27-ம் தேதி அமெரிக்காவில் ஒரு சிற்றூரில் பிறந்தார். ஒன்றரை வயதுவரை சாதாரண வாழ்க்கை வாழ்ந்தார். நோய் ஏற்பட்டது; கண் பார்வை கெட்டது, காதும் கேட்கவில்லை; அதனல் பேச முடியாமலும் போயிற்று.

இரு புலன்களை அவர் இழந்து விட்டார்; எனினும், மற்ற மூன்று புலன்களுக்கும் இயற்கை அதிக ஆற்றல்

வழங்கியது. "கண்ணைக் கெடுத்தவன் கருத்தைக் கொடுத்தான்."

குழந்தைப் பருவத்தில் தான்கண்ட வயல் வெளிகளையும், ஒளி பொருந்திய வானத்தையும், மரங்களையும், பூக்களையும் அவரால் மறக்க முடியவில்லை. எனினும், ஒவ்வொரு பொருளையும் அவர் கையால் தொட்டுப் பார்த்து அறியத் தொடங்கினர்; அசையும் ஒவ்வொன்றையும் அவர் உணரலானர். தம்முடைய எண்ணங்களை சைகைகளால் அவர் காட்டினர்.

அவர் ஆறு வயதுச் சிறுமியா யிருந்தபோது, அவருடைய பெற்ருேர் அமெரிக்காவில் மேரிலாந்தில் உள்ள பால்டிமோருக்கு அவரைக் கூட்டிக் கொண்டு போனர்கள்; அங்கே புகழ்பெற்ற ஒரு டாக்டரிடம் அவரைக் காட்டினர்கள். செவிடர்களுக்குக் கற்றுக் கொடுக்கும் டாக்டர் அலெக்ஸாண்டர் கிரகாம் பெல் என்பவரிடம் ஆலோசனை கேட்குமாறு அந்த டாக்டர் சொன்னர். காது கேளாத தமது மனைவிக்குக் காது கேட்கச் செய்வதற்குக் கருவி ஒன்றை அமைக்க முயற்சி செய்ததால் டெலிபோன் கண்டு பிடித்தவர் அலெக்ஸாண்டர் கிரகாம் பெல்.

அவரை ஹெலனின் பெற்ருேர் கண்டு பேசினர். அவர் சொற்படி, பாஸ்டனிலுள்ள அந்தகர் பாடசாலையாகிய பெர்க்கின்ஸ் நிலையத்திலிருந்து ஓர் ஆசிரியரை அனுப்ப வேண்டுமென்று கேட்டார்கள். 1807-ஆம் ஆண்டு மார்ச் மாதம் மிஸ் ஆன் சல்லிவன் என்னும் இருபது வயதுள்ள பெண்மணி ஹெலன் கெல்லர் வீட்டுக்கு வந்தார்.

அந்த ஆசிரியை வந்து சேர்ந்தது தமது வாழ்க்கையில் மிகவும் முக்கியமான நிகழ்ச்சி என்று ஹெலன்

சொல்லுகிருர். அந்த ஆசிரியை 1936-ஆம் ஆண்டு இறந்தார். அதுவரை இருவரும் ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதவர்களாக இருந்தனர்; ஆசிரியை சல்லிவன் இறந்த பின்னரும் ஹெலன் கெல்லர் தம்முடைய நண்பரும் காரியதரிசியுமாகிய மிஸ் பாலி தாம்ஸனேடு சேர்ந்து முன்போலவே கடுமையாக உழைத்து வருகிருர்.

சல்லிவன் ஹெலனைக் கண்ட முதல் நாளிலேயே ஹெலன் வலிமையும் சுறுசுறுப்பும் உள்ளவர் என்று அறிந்து கொண்டார். முதல் நாளிலேயே சல்லிவன் ஹெலனின் கையில் வார்த்தைகளை எழுத்து எழுத்தாகக் காட்டத் தொடங்கினர். சில மாதங்களில் ஹெலன் 800 வார்த்தைகள் படித்துவிட்டார். சாதாரண எழுத்திலும், பிரய்ல் எழுத்திலும் அவர் எழுதக் கூடியவரானர்.

அறிய வேண்டும் என்னும் அவரது அவா அளவு கடந்ததாகும்; அவரது முன்னேற்றம் ஆச்சரியமூட்டுவதாகும். தமது ஊருக்குப் போய் மூன்று மாதம் ஆவதற்குள் அவர் தமது நண்பருக்குப் பின்வருமாறு எழுதினர்: "இந்தக் குழந்தைக்குப் படிப்பிப்பதே என் வாழ்க்கையின் விசேஷ சம்பவமாக விளங்கும்...இந்தப் பெண் விசேஷ சக்திகள் உள்ளவள். அவற்றை அபிவிருத்தி செய்து உருவாக்க முடியும் என்பது என் நம்பிக்கை".

ஹெலன் தமது பத்தாவது வயதில் பேசப் படித்து விடவேண்டுமென்று தீர்மானித்தார். முதலில் அவர் நூறு வார்த்தை பேசினல் ஒன்றுகூட விளங்குவதில்லை. எனினும், இரவும் பகலும் அவர் முயன்ருர்; ஒரு வார்த்தையை அதனைச் சரியாய்ச் சொல்லும்வரை மணிக்கணக்காகச் சொல்லிப் பார்ப்பார். அவரது சப்தம் சில சமயங்களில் சொற்களை அறிய முடியாதவாறு தாழ்ந்தசப்தமாக

இருப்பதுண்டு; சில சமயத்தில் அளவு மீறிய செயற்கை ஒலியாக இருக்கும். எனினும், பெருமுயற்சி செய்து, இயன்ற அளவு அவர் வெற்றி பெற்ருர்.

பிற்காலத்தில் ராட்கிளிப் கல்லூரியில் அவர் ஒரு பட்டம் பெற்ருர். இயற்கைக் குறைப்பாடுகள் உள்ளவர்களுக்காக எழுதியும் பேசியும் சமூகத் தொண்டாற்றியும் அவர் புகழ் பெற்ருர்.

தம்முடைய இடர்ப்பாடுகளேயும் குறைப்பாடுகளேயும் மேற்கொள்வதற்குத் தமக்கு உதவி செய்த அன்பர்கள் பலருக்குத் தாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளதாக ஹெலன் சொல்லுகிருர். எல்லா மதங்களின் சாரமே அவரது மதக் கொள்கை. அன்புள்ள இடத்தில் கடவுள் இருக்கிருர்: கடவுள் உள்ள இடத்தில் அன்பு உண்டு என்பதே அந்தக் கொள்கை.

ஊனமுற்ற மக்கள் ஒதுங்கி வாழாமல் தங்களே ஆதரிக்கும் திறமையும், சரியான பிரஜைகளாக விளங்கும் நிலேமையும் பெற்றுவரும் அற்புதத்தை அவர் கண்டு மகிழ்கிருர். புது வாழ்வளிக்கும் இந்த அற்புதம் அமைதியாக நடைபெற்றுள்ளது.

எல்லாவிதமான பணிகளேயும் விடுத்து ஓய்வு பெறுவது என்பது ஹெலன் கெல்லரால் இயலாத காரியம். அவரது பொது வாழ்க்கையும் தனி வாழ்க்கையும் பிரிக்க முடியாதபடி ஒன்ருய் இணேந்துள்ளன. அந்தகரின் இரண்டு தர்ம ஸ்தாபனங்களுக்கு அவர் ஆலோசகராக இருக்கிருர். அப் பதவிகளினின்று அவர் நீங்கி விட்டாலும், கடிதங்கள் எழுதுவதற்கு அவருக்கு எட்டு முதல் பத்து மணி நேரம்வரை ஆகும்.

அவருக்குக் கடிதம் எழுதுவோர் பலர், அவர் உதவியை நாடி எழுதுவோர் ஆவர். தங்கள் நல்ல கண்

ஒன்றைக் கொடுத்தால். அதனைப் பயன்படுத்தக்கூடு மாயின், கொடுக்கத் தயாராக இருப்பதாக எழுதுவோரும் உளர்.

ஹெலன் அம்மையாரின் வயதுள்ள முதியோர் பலர், அவரைப் போல அயராது உழைக்க முடியாது. அவரோ எப்போதும் நல்ல உடல் நலமும், தளராத உள்ளமும் உள்ளவராகவே இருந்திருக்கிறார். "எல்லாப் புலன்களின் இன்பங்களையும் அனுபவிப்போர் என்னைக் கண்டு இரக்கம் கொள்கின்றனர்......என் வழி இருள் நிறைந்ததாக அவர்களுக்குத் தோன்றலாம். ஆயினும் என் உள்ளத்தில் அதிசய ஒளி உள்ளது. மத நம்பிக்கை என் வழிக்கு ஒளியாய் விளங்குகிறது" என்று அவர் சொல்லுகிறார். இவ்வாறு சொல்லக்கூடிய நம்பிக்கை உள்ளம் படைத்தவர் அவர்.

# வாழ்க்கைப் பாதையில்

வளவனூர் தண்டபாணி

[ஆலிவர் கோல்டுஸ்மித் கட்டுரை யொன்றைத் தழுவி எழுதியது.]

**வா**லிபர்கள் தத்தம் கதியினைத் தாங்களே கணித்துக் கொள்ளவேண்டும். பிறரின் அறிவுரையும், நண்பர்களின் நல்லுரைகளும் எப்பொழுதும் பயனளித்துவிடக் கூடும் என்று எதிர்பார்ப்பது முற்றும் பேதமை. பிறர்தம் கருத்தறிந்து வாழ்வு நடத்த விரும்பும் ஒருவனின் மனப் பான்மையை என்னென்பது? வீட்டுக்குப் பெரியவர்கள் தங்கள் குழந்தைகளை 'எதற்கும் உதவாத பிண்டமே' என்று கூடத் திட்டலாம். அதை வாலிபர்கள் பொருட்படுத்தலாமா? எதனையும் எந்த ஒரு செயலையும் கூட விடாமுயற்சியுடன் தீர ஆலோசித்து அதில் ஈடுபடும் எவரும் தோல்வி காண்பதில்லை. தீர ஆலோசனையும் விடாமுயற்சியுந்தான் வாலிபர்களின் வாழ்க்கையின் உதவியும் பாதுகாப்பும் ஆகும்.

பயன்தரத்தக்க எந்தச் செயலையும் கற்றுக்கொள்வதற்கு மிதமான திறன் இருந்தாலே போதுமானது. எந்தச் சமயத்திலும் இதன் மதிப்பு உயரக்கூடும். ஒருவன் ஒரு தொழிலை கசடறக் கற்க வேண்டும். உரியகாலத்தில் ஒன்றுனாலும் அதை நன்றாகச் செய்யும் பழக்கம் கைவரப்பெற வேண்டும். பல தொழில்களை கற்றறிந்தும் பிரயோஜனமில்லாது போவது நாம்

அன்ருடம் பார்க்கக்கூடியதே. உதாரணத்துக்கு ஒரு கதை கூடச் சொல்லுவது உண்டு.

ஓர் ஊரில் மந்திரக்காரனொருவன் இருந்தான். அவன் பலவகையான மந்திர தந்திரங்களில் கைதேர்ந்தவன். அவன் தன் நண்பனுன தையற்காரனொருவனைச் சந்தித்தான். சோகத்தால் குமைந்து கிடந்த அவனை நோக்கி சோகத்துக்குக் காரணம் வினவினுன். தையற்காரன் "நண்பனே, என் நிலையை எப்படி சொல்லுவேன்? உலகத்தார் எல்லாம் தலைக்குக் குல்லாய் போடுவதில்லை யென்று முடிவுக்கு வந்தால் என்னுடைய பிழைப்பு என்னுவது? வேறெந்தத் தொழிலும் எனக்குத் தெரியாதே" என்று கூறினுன். உடனே மந்திரவாதி "உண்மைதான். ஒரு தொழில் பரிச்சயமுள்ளவர்களின் கதியெல்லாம் இப்படித்தான். என்னைப் பொறுத்தவரைக்கும் கடவுள் போதுமானவர். எனக்கு சகல வித்தைகளையும் சொல்லி வைத்திருக்கிருர். நீ பிச்சை யெடுக்க வேண்டிவந்தால் என்னிடம் வந்தாக வேண்டும்" என்று சொல்லிப் பிரிந்தான். கொஞ்சகாலத்துக்குள் அந்நகரில் கொடிய பஞ்சமொன்று ஏற்பட்டு மக்கள் பாடாய்த் தவித்தனர். தையற்காரனுக்கு வருமானம் கொஞ்சமாவது இருந்து வந்தது; அறவே நின்றுவிடவில்லை. ஆனுல் மந்திரவாதியின் நிலைதான் மோசமாகிவிட்டது. பசிக்கு மிஞ்சினுல் அல்லவா மக்கள் மந்திரக்காரனுக்குக் கொடுக்க முடியும்? எத்தனை வித்தை கற்றும் மந்திரவாதியின் பிழைப்பில் மண் விழுந்த பரிதாபத்தை என்ன சொல்லுவது?

அகம்பாவமும் அடக்கமின்மையும் அதிர்ஷ்டத்தின் பகைவர்கள் என்பதை வாலிபர்கள் உணரவேண்டும். நொடிந்துபோன மக்களின் கோபம் சாமான்யமானதல்ல.

எனினும் கோபமே குடியைக் கெடுக்கும் என்பது தெளிவு. உதாரணத்துக்கு ஒரு கதையைச் சொல்லுகிறேன். ஒரு வாத்து குளமொன்றின் அருகே குஞ்சு பொரித்திருந்தது. அக் குளத்துக்குத் தானே சர்வாதிகாரி என்ற இறுமாப்பில் அந்தப் பக்கமாய் போகும் கோழி, பூனை, பன்றி முதலியவற்றை அச்சுறுத்தி வந்தது. இதனால் அவை தண்ணீர் குடிக்கக்கூட வேறிடத்தை நாடி ஓடிவிடும். ஆனால் ஒரு நாள் தாகமேலிட்ட நாயொன்று அக் குளத்தருகே ஓடி வந்தது. அப்போது வாத்து "ஏ அற்ப நாயே! என் அனுமதியில்லாமல் எப்படி இக் குளத்திலிறங்கி நீர் பருக முடியும்? மரியாதையாய் இங்கிருந்து ஓடி விடு' என்றவாறே தன் அலகால் குத்தி விரட்டியது. நாயோ மிகப் பொறுமையுடன் கோபத்தை அடக்கிக் கொண்டு "வீணான வாத்தே, ஏன் வாய் கிழியப் பேசுகிறாய்? உன்னை கடித்து குதறிவிட முடியும். இருந்தும் உன் குஞ்சுவின் நிலையைப் பார்த்து உன்னை சும்மா விடுகிறேன்" என்று சொல்லி கம்பீரமாகச் சென்று நீரைக் குடித்து விட்டுத் தன் வழி சென்றது.

இறுதியாக இளைஞர்கள் முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கும்போது இடையூறு விளைவிக்க என்றே உருவாகும் தீய சக்திகளை எதிர்த்துப் பழக வேண்டும். சிலர் இருக்கிறார்கள், பிறர் தங்களுக்குத் தொந்தரவு கொடுக்காமல் இருந்தாலே போதுமென எண்ணுபவர்கள். ஆகவே இவர்களும் யாருக்கும் தொந்தரவு தராது எவ்வாற்றாலும் தங்களைத் திருப்தி செய்து கொள்ள முயலுகிறார்கள். எல்லோரையும் ஒரே காலத்தில் திருப்தி செய்வதென்பது அவரவர்களின் அபிலாஷையைப் பொறுத்ததானால் முடிவில் ஏமாந்தவர்களாகவே ஆகின்றனர். உதாரணமாக, மிகவும் கீர்த்தி பெற்ற ஓவியன் ஒருவன் பலரும் புகழ்ந்து தன்னைப்

பாராட்ட வேண்டும் ஏன்று கருதிச் சிறந்த வண்ணக் கலவைகளுடன் படமொன்றெழுதினுன். அதனடிக் குறிப்பில் 'இதில் குற்றம் காண்பவர்கள் குற்றமுள்ள இடத்தை திருத்தி விடலாம்' என்று எழுதி ஒரு பொது இடத்தில் தொங்க விட்டான். அன்று மாலை ஓவியன் அந்தப் படத்தைப் போய் பார்த்ததில் அலங்கோலமாக அடித்தும், திருத்தியும் ஆபாசமாக இருந்ததைக் கண்டான். காரணம் அவரவர்கள் தங்களின் அபிலாஷையைச் சித்திரத்தில் காட்டி விட்டனர். இதைக் கண்ட ஓவியன் மனம் நொந்து மறுநாள் வேறு படமொன்றை யெழுதி அதனடியில் 'இதில் சிறந்த அம்சத்தை மட்டும் குறிப்பிடவும்' என்றெழுதி அந்த இடத்தில் மறுபடியும் தொங்கச் செய்தான். முன்னைப் போலவே அன்று மாலையும் போய்ப் பார்த்ததில் படம் அப்படியே இருந்தது. ஒருவரும் அதை தொட்டுக்கூட இருந்திருக்கமாட்டார்கள். பிறரின் குற்றத்தை வெகு சீக்கிரத்தில் கண்டுபிடித்துவிடும் இந்த குருட்டு உலகம். பிறரின் குணத்தையோ பண்பையோ எங்கே அறியப் போகிறது ? 'உலகில் ஒரு குறிப்பிட்ட சாராரை திருப்தி செய்ய வேண்டுமானுல், மற்ருெரு சாரார் என்னசொல்லு வார் என்று எதிர்பார்க்கக் கூடாது' என்ற முடிவுக்குத் தான் ஓவியனுல் வர முடிந்தது.

Edited, Printed and Published by A. K. CHETTIAR at
Kumari Malar Press, 100, Mowbrays Road, Mardas-18

# கவுண்டர் & கம்பெனி
## (பிரைவேட்) லிமிடெட்

**தலைமை ஆபீஸ்:**
கூட்ஸ் ஷெட் ரோடு
பொள்ளாச்சி.

**கிளை ஆபீஸ் & ஷோரூம்**
7,69, ஜெயில் ரோடு
கோயமுத்தூர்

## கோயமுத்தூர் & நீலகிரி ஜில்லாக்களுக்கு:

டாடா-மெர்சிடெஸ்-பென்ஸ் டீசல் டிரக்,

ராயல் என்பீல்ட் மோட்டார் சைக்கிள்

விற்பனையாளர்கள்.

---

**நா. மகாலிங்கம், B.Sc., A.M.I.E., M.L.A.,**

மானேஜிங் டைரக்டர்.

KUMARI MALAR REGD. NO. M. 4819

1912-ல் மோட்டார் போக்குவரத்தில் பெரும் புரட்சி ஏற்படுத்த உதவியவர்



# இவர்தான் முதல் டி. வி. எஸ். பிரயாணி

46 ஆண்டுகளுக்கு முன் பஸ் நடத்தத் துணிச்சல் வேண்டும்: அதில் ஏறவும் அவ்வளவு துணிச்சல் வேண்டும்! துணிந்து முதல்முதல் ஏறிய இவரது உறுதியான நம்பிக்கையே டி.வி.எஸ். ஸ்தாபனம் வளர அழுத்தமான அஸ்திவாரமாயிற்று. 1912-ல் இருந்தது போலவே டி.வி.எஸ். அன்பர்களின் திடநம்பிக்கையே இன்றும் எங்கள் வளர்ச்சிக்கு ஆதாரம்.

இன்று பெருகி வரும் தென்னிந்திய மோட்டார் தொழிலில் எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்துவரும்

டி.வி.எஸ். ஸ்தாபனத்தின் பகுதிகள்:

மதராஸ் ஆட்டோ சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்., மதராஸ், பெங்களூர்; சதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிட்., மதுரை; சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிட்., மதராஸ்; சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிட்., புதுக்கோட்டை, மதராஸ்; தி மதராஸ் மோட்டார் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிட்., மதராஸ்; சுந்தரம் பைனன்ஸ் பிரைவேட் லிட்., மதராஸ்; இந்தியா மோட்டார் பார்ட்ஸ் அண்டு அக்ஸெஸரீஸ் பிரைவேட் லிட்., மதராஸ்.

TVS

**டி. வி. சுந்தரம் ஐயங்கார் அண்டு சன்ஸ் பிரைவேட் லிட்.. மதுரை**

TVS 226a